*பார்வைக்கு...*
சஞ்சிகை : இளவேனில்
பத்தாம் பதிப்பு : 17 ஜூலை 2016
வெளியிடுவோர் : கேசி தமிழ் மன்றம்
வடிவமைப்பு : க.பார்த்தீபன்
அட்டைப்படம் : இ.பார்த்தீபன்
தொடர்புகட்கு : கேசி தமிழ் மன்றம்
PO Box 2516,
Fountain Gate, VIC 3805
Australia

# பொருளடக்கம்


- வணக்கம் *2*
- தலைவர் உள்ளத்திலிருந்து *3*
- தமிழுக்கு அமுதென்று பேர் *4*
- அன்னையைப் போலொரு தெய்வமில்லை *5*
- வாடும் பூக்கள்... *6*
- நான் பெற்ற முதல் விருதுகள் *7*
- தண்ணீர் *8*
- மகாத்மா காந்தி *9*
- தொலைத்தொடர்பு சாதனங்களும் நாமும் *10*
- பூனை வகைகள் - சித்திரம் *11*
- எனது இலட்சியம் *13*
- பாடசாலை விளையாட்டுப் போட்டி *14*
- நாமே எமது முதல் எதிரி *15*
- பருவத்தே பயிர்செய் *17*
- இலங்கை *18*
- மழலைத் தமிழ் *19*
- அவுஸ்திரேலியா *20*
- நான் சந்தித்த சுவாரசியமான மனிதர் *21*
- எங்கள் வீடு - சித்திரம் *22*
- புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் *23*
- கல்வி *23*
- அன்பு *24*
- பிள்ளையார் - சித்திரம் *26*
- நெருடல் *27*
- அத்தனைக்கும் ஆசைப்படு *31*
- பறவைகள் - சித்திரம் *34*
- பெண்மையின் மறுபக்கம்- பெண்ணாக ஒரு பார்வை *35*
- டாலர் சொல்லும் கதை *39*
- ஆறு (தொடர் கதை) - அத்தியாயம் 8 *45*
- நூற்றுக்கு நூறு *50*

இளவேனில்

# வணக்கம்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற சுப்பிரமணிய பாரதியாரின் வாக்குக்கேற்ப புலம்பெயர் தேசத்தில் தமிழ் மொழியையும் தமிழர் கலாசாரத்தையும் பாதுகாக்க வழிசெய்வது மட்டுமன்றி அதன் முக்கியத்துவத்தை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லல் அவற்றை கடைப்பிடித்தல் போன்றவற்றை தலையாய நோக்கங்களாக கொண்டு செயற்படும் கேசி தமிழ் மன்றத்தின் வெளியீடான இளவேனில் சஞ்சிகையின் பத்தாவது மலரோடு வாசகர்களாகிய உங்களை சந்திப்பதில் ஒப்பில்லா உவகையடைகின்றோம்.

இளவேனில் சஞ்சிகையானது, அடுத்த தலைமுறையினர் மத்தியில் தமிழ் மொழி மற்றும் தமிழ் அடையாளம் என்பவற்றை அறிமுகப்படுத்தி, அவர்களை தமிழ் மொழியில் எழுத வாசிக்க ஊக்கபடுத்திக் கொண்டிருகின்றது என்றால் மிகையாகாது. மேலும் வளர்ந்துவரும் ஆக்கப்படைப்பாளிகளையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்தி அவர்களுடைய ஆக்கங்களை சஞ்சிகையாக வெளியிடுவதன் மூலம் அவர்களுக்கு சிறந்த ஒரு களத்தை அமைத்துக் கொடுக்கின்றது.

பல்வேறு கலாச்சார பண்பாடுகளிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் எமது அடுத்த தலைமுறை, காலவோட்டத்தில் தமிழையும் தமிழ் கலாச்சாரத்தையும் மறந்துவிடக்கூடாதென்பதற்காய் கேசி தமிழ் மன்றத்தின் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்,

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆக்கப் படைப்பாளிகள் அனைவரும் உங்கள் ஆக்கங்களை காலகிரமத்தில் அனுப்பிவைத்து இளவேனில் ஆசிரியர் குழுவிற்கு ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்,

மேலும் இளவேனில் சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கி, இளவேனில் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு வித்திடுமாறு ஆசிரியர் குழு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றது.

**நன்றி!**

**ஆசிரியர் குழு**

# தலைவரின் உள்ளத்திலிருந்து ......

2010ம் ஆண்டில் விக்டோரியா மாநிலத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட கேசி தமிழ் மன்றம் இன்று தன்னுடைய ஆறாவது அகவையில் அவுஸ்திரேலியா கண்டம் முழுவதும் தன்னாலியன்ற சேவைகளை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்கிறது.

மாதந்தோறும் மூத்த குடிமக்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வையும் சிறுவர்களுக்கான இசை, கூத்து மற்றும் நாடகப் பட்டறைகளையும் அவ்வப்போது ஒழுங்கு செய்து அவர்களை ஊக்குவிக்கும் கேசி தமிழ் மன்றம், தமிழர் தம் பாரம்பரிய பண்பாட்டைப் பறைசாற்றி நிற்கும் தைப்பொங்கல் மற்றும் ஆடிப்பிறப்பு விழாக்களை கலைநிகழ்வுகளோடு மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

சிறுவர் முதல் பெரியோர் வரை ஆக்கங்கள் படைக்க விரும்புவோரையும் ஏனையோரையும் எழுதத் தூண்டும் நோக்கில் களம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இளவேனில் சஞ்சிகை இன்றும் புதிய பொலிவுடன் வெளிவரவிருக்கிறது. ஆண்டுக்கு இருமுறை தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு விழாக்களில் மலர்ந்து மணம் பரப்பும் இளவேனில் எதிர்வரும் காலங்களிலும் புதிய பொலிவுடன் திகழ வேண்டும் என்று வாழ்த்துவதோடு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சிறிய கிறுக்கல்களையோ ஆக்கங்களையோ இச்சஞ்சிகையில் எழுதத் தூண்டவேண்டும் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் ஒத்துழைப்போடு கேசி தமிழ் மன்றம் தொடர்ந்தும் தன் சேவைகளை வழங்க வேண்டும் என்று வாழ்த்தி அமைகிறேன்.

**மதி மதியழகன்**

**தலைவர்**

**கேசி தமிழ் மன்றம்**

## தமிழுக்கு அமுதென்று பேர்..

-மகாலெட்சுமி தியாகராஜன்-

உலகின் மொத்த மொழிகள் ஆறாயிரத்து எண்ணூற்று ஒன்பது (6809) என்றும் அவற்றுள் பேசவும் எழுதவும் கூடிய மொழிகள் எழுநூறு (700) மட்டுமே என்றும், சொந்த வரி வடிவம் கொண்ட மொழிகள் நூறு (100) தான் என்றும், அவற்றுக்கெல்லாம் தாயாக, மூல மொழியாகத் திகழ்பவை ஆறு (6) மொழிகள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. அந்த ஆறு மொழிகளாவன....

- **எபிரேயம்** Hebrew
- **கிரேக்கம்** Greek
- **இலத்தின்** Latin
- **சமஸ்கிருதம்** Sanscrit
- **தமிழ்** Tamil
- **சீனம்** China

இவற்றுள் தமிழ், சீனம் தவிர மற்ற நான்கு மொழிகளும் பேச்சு வழக்கில் இல்லை.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றியது தமிழ் மொழி. சிந்து வெளி நாகரீகம் மற்றும் சுமேரியர் நாகரீக காலத்தில் கூட இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ் மொழியின் பயன்பாடு இருந்திருக்கிறது. ஐம்பெரும் காப்பியங்களும், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களும் தமிழின் சிறப்பைக் கூறுகின்றன. கம்பன், வள்ளுவன், இளங்கோவடிகள் தமிழுக்கு பெருமை சேர்த்தனர். இவர்கள் வழி வந்த பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் போன்ற நவீனகால கவிஞர்களும் சாகாவரம் பெற்ற நூல்களை எழுதி தமிழை வளப்படுத்தினார்கள்.

இப்போது பேசப்படும் மொழிகளுள் தமிழ்தான் மிகப் பழைமையான மொழி என்று சமீபத்தில் கண்டறியப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது என்று லண்டனிலிருந்து வெளியாகும் "மிரர்" (Mirror) பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பழமைக்குப் பழைமையாய் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் தமிழ் மொழி செம்மொழித் தகுதி பெற்றுள்ளதில் வியப்பேதும் இல்லை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தனது பாடலில் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாடியது நூற்றுக்கு நூறு பொருத்தமானதே.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பெற்றமைக்கு பெருமை கொள்வோம். தாய் தமிழ் போற்றுவோம். பாரதி கூறியபடி "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் செழிக்கச் செய்வோம்". வாழ்க தமிழ்.

## அன்னையைப் போலொரு தெய்வமில்லை!

-துவாஷகி மகிந்தன்-

அன்னையைப் போலொரு தெய்வமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். மண்ணில் பிறக்கும் எந்தக் குழந்தையும் முதலில் சொல்லும் வார்த்தை "அம்மா". தமிழின் முதலெழுத்தான "அ" கரத்தில் ஆரம்பித்து மெல்லினம் இடையாக "ஆ" என்னும் ஒலியில் முடிவுறுவதால் "அம்மா" என்ற சொல்லில் இலகுத்தன்மை, இனிமை, மென்மை, அழகு, அன்பு தொனிக்கிறது.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்னும் மூத்தோர் வாக்கில் முதலில் நிற்பவள் மாதா. அன்னைக்கு அடுத்த படியாக தெய்வம்கூட நிலை நிறுத்தப்படவில்லை. மனித உறவுகளிலேயே உயர்ந்த உறவு அம்மா. எந்தவித எதிர்பார்ப்பில்லாமல் அர்ப்பணிப்புடன் அன்பு மிகுந்திருக்கும் உறவு தாய் ஆகும். தரணியில் பிறந்த தன் மகவை ஆசையோடு அள்ளி அணைத்து குருதியைப் பாலாக்கி ஊட்டும்போது அவள் தன் உயிரை உருக்கும் அன்பை ஊட்டுகின்றாள். தன் குழந்தைகளை தன்னலம் கருதாது சேய் நலம் கருத்தில் கொண்டு கண்ணை இமை காப்பதிலும் மேலாக கருத்தொருமித்து காத்து வளர்க்கின்றாள். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பர். அன்னையின் அன்பிற்கு ஈடுஇணை ஏதுமில்லை. தன் சேய் எத்தகையதானாலும் எந்த நிலையில் வாழ்ந்தாலும் எத்தனை வயதினரானாலும் சாகும் வரை அவள் விழிகளுக்கு தன் சேய் கையில் தவழும் மழலையே.

உலக மாந்தர்கள் இனத்தால், மொழியால், மதத்தால் வாழும் பிரதேசங்களால் வேறுபட்டிருப்பினும் உலகிலுள்ள பொதுமையான ஒரே பண்பு கொண்ட ஒற்றை உறவு "அன்னையே". எனவே, அன்னையின் மனமே தெய்வம் வீற்றிருக்கும் கோவில். அன்னையைத் தொழுபவன் தன் வாழ்வில் குறைகளேதுமின்றி மிகவும் உயர்வாக வாழ்வது திண்மை. "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்னும் வள்ளுவன் வாக்கு முற்றிலும் உண்மையாகும். தரணி போற்ற தாயன்பு கொண்டு வாழ்வோம். தாய்மையை மிஞ்சி ஒரு தெய்வம் உலகில் வேறொன்றும் இல்லை.

எம் கிறுக்கல்களை வாசித்த முதல் வாசகி அம்மாவாகும். உலகிற்கு எங்களையும், எங்களுக்கு உலகையும் அறிமுகம் செய்தவள் அன்னை என்னும் தெய்வமாகும். இதனால்தான் என்னவோ தாயில் சிறந்த கோயில்கள் இல்லை என்று எம் சான்றோர் கூறிவிட்டு சென்றுள்ளார்கள்.

## வாடும் பூக்கள்...

-நந்தினி (காவியா)-

கருவில் உதிக்க விட்ட
தாயின் தாலாட்டு
கேட்க முடியாமல்
வாடும் பிஞ்சின் அழுகுரலை கேட்டும்
கொடுமைக்காரன் மனம்
இளகவில்லைபோலும்

குறிக்கபட்ட நாளின்
ஏட்டு புத்தகத்தை
எடுத்துக்கொண்டே
பாசக்கயிற்றை வீசி
காலன் அணைத்துக்
கொள்கின்றான்

நாளும் பொழுதும்
நல்லொளி பெற்ற
குழந்தை மனமும்
குமரியாக கவலையின்றி
கழிந்தே போகும்
இளமைக்காலத்து
இளம் சிட்டின்
இனியான வசந்தம்

இனிய மனம்
உவர்பாய் போனால்
இம்சைகள்
அதிகம் பெண்களுக்கே
வாடை காலத்தில்
அடியோடு அழிந்திடும்
வாழையாய் பெண்டிர்
வாழ்வும்
குழந்தைகள் கனவை
நெஞ்சினில் நிறுத்தி
சமூக தொல்லையை
கண்ணீரில் கரைத்து
கரும்புள்ளிக்குள் சித்திரம்
வரையும் ஒவ்வொரு
அழகியும் மோனலிஸா
ஓவியம்

தனிமை தேசத்து
ஒளிவிளக்காய்
அங்கே ஒரு விளக்கு
என்னைத்து உணர்வுகளுக்கு
வண்ணம் அடிக்க
மீண்டும் வசந்தம்
பூக்கும் என நம்பிடும்
பேதை பெண்களின்
வாழ்வில்

அன்பினை விதைக்கும்
அனைத்து நெஞ்சமும்
அறிவது இல்லை
மனம் ஒரு மரம் விட்டு
மரம் தாவும் குரங்கு என்று
வேதனை சுமக்கும்
தேவதைகள் நெஞ்சம்
மெழுகை போல
மென்மையானதே

மென்மையான இதயத்தை
அன்பான வார்த்தைகள்

கொண்டு அலங்கரிக்காதீர்கள்
அன்பின் ஆழம் அதிகமானால்
துன்ப கோடுகள் நீளமாகும்
எதிர்பார்ப்புக்கள் நிரந்தரமாகும்
தெளிந்த முடிவுகள் என்றும்
விரும்பிய முடிவுகள் அல்ல

சமூகத்துக்காய் போட்ட கோடுகள்
என்றும் எப்போதாவது
அழிந்து போகுமே
மாற்றங்கள் மட்டுமே
நிரந்தர சட்டசபை
உறுப்பினராய்

வயது எல்லைகளை வைத்து
வானவில் கனவுகள்
வரையப்படுவதில்லை

காதல் எப்போது எங்கே
யாரிடம் பூக்கும்
என்பது யாருக்கும்
தெரியாது

உண்மைகள் பலவற்றை
மேடையில் மறைத்து
வாழும் நிரந்தர நாடக
கலைஞர்களே நாம்
அனைவரும்

உள்ளே உறங்கி
கிடக்கும் உள்மனம்
மட்டுமே அறியும்
எம் மனம் எப்போது
எங்கே சலனப்பட்டது
என்று

## நான் பெற்ற முதல் விருதுகள்!

**-ஹரீஸ்-**

ஆஸ்திரேலியாவில் கடந்த வருடம் நடை பெற்ற தமிழ் ஊக்குவிப்பு போட்டியில் பேச்சு மற்றும் திருக்குறள் போட்டிகளில் விருதுகளைப் பெற்றேன். இவையே என் முதல் விருதுகள். இவற்றைப் பெற்றதில் என்னைவிட என் அம்மாவிற்குத்தான் அதிக சந்தோசம்.

நான் பிறந்ததிலிருந்து 2012 ஆம் ஆண்டுவரை மலேசியா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில் வாழ்ந்தோம். அதனால் என்னால் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் ஆஸ்திரேலியா வந்த பின்னர் ஐந்து வயதில் என் அம்மா எனக்கு தமிழ் சொல்லித் தந்தார். அதன் பின்னர் நான் தமிழ் எழுதப் பழகிக்கொண்டேன்.

என் அம்மா என்னை பாரதி பள்ளியில் சேர்த்து விட்டார். அங்கு தமிழை மென்மேலும் படித்தேன். அதனால் என் தாய் மொழியை கற்க முடிந்தது.

இதன் பின்னர் கடந்த வருடம் தமிழ் ஊக்குவிப்பு போட்டியில் கலந்துகொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றேன். இனி வரும் காலங்களிலும் தமிழ் மொழி ஊடாக பல விருதுகளை பெறுவேன். என் தாய் மொழியைக் கற்பித்த என் அம்மாவுக்கும் பாரதி பள்ளிக்கும் நன்றிகள்.

## தண்ணீர்

*-கீர்த்திகன் சீவராஜா-*

உலகிலே வாழும் எல்லா உயிரினங்களுக்கும் மிகவும் தேவையானது தண்ணீர். இந்த தண்ணீர் இல்லை என்றால் பூமியிலே எந்த உயிரினமும் உயிரோடு இருக்கமுடியாது. உயிர்களுக்கும் பயிர்களுக்கும் மிகவும் அத்தியாவசியமான இந்த தண்ணீர் பூமியிலே மிகவும் முக்கிய வளம் ஆகும்.

சில நாடுகளில், போதியளவு தண்ணீர் இருக்காது. இதனால் அங்குள்ள சிறுவர்களும், பெரியவர்களும் சுத்தமாக இருக்கமாட்டார்கள். பல சிறுவர்கள் தண்ணீர் இல்லாமல் நலம் குறைவாக உள்ளார்கள். உதாரணமாக, ஒவ்வொரு வருடமும் , நைஜிரியாவில் கிட்டத்தட்ட 68 ஆயிரம் பிள்ளைகள் சுத்தமான தண்ணீரில்லாமல் அசுத்த தண்ணீரைக் குடித்து இறக்கிறார்கள் என்று தகவல்கள் சொல்கின்றன. அங்கே ஐந்து கோடி, இருபது லட்சம் மக்களுக்கு சுத்தமான தண்ணீர் இல்லை.

தண்ணீர் குடிப்பதற்கு மட்டுமல்ல, பயிர்களுக்கும் உதவும். விவசாயிகள் ஒவ்வொரு நாட்களுக்கும் தண்ணீரை பயிர்களுக்கு ஊற்றினால் தான் அந்த பயிர்கள் நன்றாக வளரும். இந்த பயிர்களுக்கு தண்ணீர் இல்லை என்றால், அதுவும் இறக்கும். இதனால் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படும்.

இந்த பூமியிலே வாழும் எல்லோருக்கும் தண்ணீர் மிகவும் முக்கியம், ஆனால் உலகத்திலே அவ்வளவு தண்ணீர் இல்லை. பூமியில் சுத்தமான தண்ணீர் கிடைப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று மழை ஆகும். ஆனால் மனிதர்கள் மரங்களை வெட்டி, காடுகளை அழிக்கிறார்கள். இதனால்தான் மழை பெய்யாமல் தண்ணீர் குறைந்து போகிறது. மற்றவொரு காரணம், மனிதர்களாகிய நாங்கள் குப்பைகளை குளங்கள் மற்றும் ஏரிகளின் தண்ணீருக்குள்ளே போட்டால் அந்த தண்ணீர் அசுத்தம் அடைகிறது. அப்படி அசுத்தமாக மாறிய தண்ணீரை நாம் குடிக்க இயலாது.

இன்றைய கால கட்டத்தில் இலங்கையின் தமிழீழப்பகுதியில் முக்கியமாக, வன்னிப்பகுதியில் வாழும் மக்களுக்கு குடிநீரை பெற்று கொடுப்பதற்காக வெளிநாடுகளில் உள்ளோர் பல்வேறு வழிகளில் நிதிகளை சேகரித்து வழங்கி வருகின்றார்கள். அந்த நிதியின் மூலம் அப்பகுதி மக்கள் குழாய்க்கிணறுகளை அமைத்து குடிநீரை பெறுவதுடன் விவசாயத்தையும் செய்யக்கூடியதாக உள்ளது.

இந்த தண்ணீரின் மூலம் தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் பயன் பெறுகிறார்கள். இந்த தாவரங்கள் வளரவில்லை என்றால், மிருகங்கள் உணவின்றி அவை இறக்க நேரிடுகின்றன. மனிதர்களும் பட்டினிச் சாவை எதிர்நோக்குவார்கள். இதனால்தான் நாம் தண்ணீரை கவனமாக பாவிப்பதுடன் நிறைய மழை நீரை பெறுவதற்காக மரங்களை வெட்டிக் காடுகளை அழிக்காமலும், மரங்களை நட்டு வளர்த்தும் மழையினை வரவழைத்து எல்லோருக்கும் சுத்தமான தண்ணீர் கிடைக்க அனைவரும் எம்மாலான முயற்சி செய்வோம்.

மரங்களை வளர்த்து
மழையினை பெறுவோம்
மழையினை பெற்று
மனுக்குலம் காப்போம்!

**மகாத்மா காந்தி**

மகாத்மா காந்தி அவர்கள் அக்டோபர் 02ம் திகதி 1869 ஆண்டு குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்ற இடத்தில் கரம்சான்ட்காந்தி காந்திக்கும் புட்லிபாய்க்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற் பெயர் மோகனதாஸ் கரம்சான்ட் காந்தி. காந்தி அவர்கள் பள்ளியில் படிக்கும்போதே நேர்மையான மாணவனாக விளங்கினார். தன்னுடைய 18ம் வயதில் அவர் பாரிஸ்டர் எனப்படும் வழக்கறிஞர் கல்விக்காக இங்கிலாந்து சென்றார். தன்னுடைய வழக்கறிஞர் கல்வியை வெற்றிகரமாக முடித்து பாரதம் திரும்பிய காந்தி சிறிது காலம் வழக்கறிஞராக பணியாற்றினார்.

இந்திய விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல 1885ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசில் இணைந்தார். ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட காந்தி அவர்கள் 1942ம் ஆண்டு ஆகஸ்ட் 08ம் தேதி ஆங்கில அரசுக்கு எதிராக ஆகஸ்ட் புரட்சி என அழைக்கப்படும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தினை தொடங்கி வைத்தார். காந்தியின் மன உறுதியையும் அகிம்சை பலத்தையும் கண்ட ஆங்கிலேய அரசு திகைத்தது. இறுதியில் காந்தியின் இடைவிடாத போராட்டத்தால் 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் இந்திய சுதந்திரப் பிரகடனம் அரங்கேறியது.

அகிம்சை என்னும் வார்த்தைக்கு அர்த்தம் சொன்ன மகாத்மா காந்தி அவர்கள் 1948ம் ஆண்டு ஜனவரி 30ம் நாள் (அதாவது இந்தியா சுதந்திரம் அடைந்த அடுத்த ஆண்டே) புது தில்லியில் நாதுராம் கோட்சே என்னும் கொடியவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## தொலைத்தொடர்பு சாதனங்களும் நாமும்..


-ஹரிஜன் பசுபதிதாசன்-

இன்றைய நவீன உலகத்தில் நாம் எல்லோரும் கூடுதலாக பாவிப்பது தொலைத் தொடர்பு சாதனங்கள். இது நமது வாழ்க்கையில் பல பயன்களைத் தருகிறது. ஆனால் சில நேரத்தில் தொலைத்தொடர்பு சாதனங்கள் நமக்கு தீமைகளும் தரும்.

தொலைத்தொடர்பு சாதனங்கள் அதாவது தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் தொலைவில் வாழும் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு கொண்டு மகிழலாம். தொலைத்தொடர்பு சாதனங்கள் உதாரணமாக தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணையத்தளம் மூலம் இந்த உலகத்தில் நடக்கும் எல்லா சம்பவங்களையும் குறுகிய நேரத்தில் அறியலாம். சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இதன் மூலம் பயன் அடையலாம். படிப்புக்கு, வேலைக்கு மற்றும் பொழுது போக்குக்கு தொலைத்தொடர்பு சாதனங்களைப் பாவிக்கலாம். இணையத்தளம் மூலம் நமக்கு தெரியாத தகவல்களை அறியலாம். இவற்றைப்போல் இன்னும் பல பயன்களை நாம் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் அடையலாம்.

இவ்வளவு பயன் கொடுக்கும் தொலைத்தொடர்பு சாதனங்கள் நாம் தப்பான முறையில் பாவித்தால் நமக்கு தீமைகளும் ஏற்படும். அதாவது தொலைத்தொடர்பு சாதனங்களால் நமது உடல் நலத்திற்கு பாதிப்பு ஏற்படுகிறது. உதாரணமாக நாங்கள் அதிக நேரம் தொலைக்காட்சி பார்த்தால் நமது கண்கள் பாதிக்கப்படும். கைத் தொலைபேசியில் அதிக நேரம் கதைத்தால் அதில் வரும் கதிர் வீச்சால் நமது மூளையை பாதிக்கும். படிக்கும் சிறுவர்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை அதிக நேரம் பாவித்தால் அவர்களின் அக்கறையும் கவனமும் படிப்புமேல் குறைந்திடும். இதைப்போல் இளைஞர்களும் இணையத்தளம் மூலம் தப்பானவர்களோடு பழகலாம். நாம் எல்லோரும் தொலைத்தொடர்பு சாதனங்களை நம்பிக்கொண்டிருந்தால் நாம் நமது சுய சிந்தனையை இழந்துவிடுவோம்.

முடிவாக நான் கூற வருவது தொலைத்தொடர்பு சாதனங்களை தப்பான முறையில் பாவித்தால் நமக்கு தீமைகளும் கஸ்டங்களும் வரும். ஆனால் நாங்கள் எல்லோரும் தொலைத்தொடர்பு சாதனங்களை கட்டுப்பாடான மற்றும் சரியான முறையில் பாவித்தால் நாம் எல்லோரும் தொலைத்தொடர்பு சாதனங்களின் நன்மைகளை அடையலாம்.


சிங்கம்
சிறுத்தை
புலி

# பூனை வகைகள் (Feline Family)

1. உலகில் 36 வகையான பூனை-கள் உள்ளன.
2. இவை பொதுவாக மாமிச உண்ணிகள் ஆகும்.
3. மனிதர்களால் உணரமுடியாத நுட்பமான ஒலிகளைக்கூட இவைகளால் கேட்கமுடியும்.
4. பூனைகளால் இரவிலும் நன்றாகப் பார்க்க முடியும்.
5. பூனை இனங்களுக்கு உதாரணமாக சிறுத்தை, காட்டுப் பூனை, சிங்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அங்கயன்
வயது - 6

## எனது இலட்சியம்

-பிரியங்கா-

எனது இலட்சியம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பு "இலட்சியம்" என்ற சொல்லின் பொருள் என்ன என்பதை முதலில் நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் தனது வாழ்நாளிலே இறுதியாக அடைய வேண்டும் என்று விரும்புகின்ற ஒரு நல்ல நிலை அல்லது இலக்கு "இலட்சியம்" எனப்படும். இலட்சியம் என்ற சொல்லுக்கு இலக்கு, குறிக்கோள், நோக்கு, குறி என பல வேறு சொற்களும் உள்ளன.

இந்த பரந்த உலகிலே , வாழப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இலட்சியம் ஒன்று இருக்க வேண்டியது மிக அவசியமாகும். ஆண், பெண், இளையோர், முதியோர் என்ற வேறுபாடுகள் இன்றி இலட்சியம் என்பது எல்லோருக்கும் ஏற்புடையதாகும். கண் போகும் போக்கிலே கால்களும், கால்கள் போகும் போக்கிலே மனமும் போனால் இலட்சியம் இல்லாதவன் என்று இந்த உலகம் பழிக்கும். அப்படிப் பட்டவர்களுடைய வாழ்க்கையும் சிதைந்து சீரழிந்து போய்விடும். ஆகையினாலே இலட்சியம் என்பது மனித வாழ்வுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

இப்போது "எனது இலட்சியம்" என்ற விடயத்திற்கு வருகிறேன். வைத்தியத் துறையில் சேவையாற்றுவதே எனது இலட்சியம் ஆகும். சேவை ஆற்றக்கூடிய துறைகளிலேயே வைத்தியத் துறையே உயர்ந்தது என்பது எனது அசைக்க முடியாத கருத்தாகும். அத்துறைக்குச் சேவை செய்வதே எனது இலட்சியம் என்பதை எண்ணி எண்ணி பெருமையடைகின்றேன்.

சேவையாற்றல் என்ற செயற்பாடு பல வகைப்படும். இதில் மனிதர் மற்றும் மிருகங்கள் என்ற உயிரினங்களுக்குச் சேவையாற்றல், இனம் மொழி நாடு போன்றவற்றுக்குச் சேவையாற்றல் என்பன அடங்கும். இவற்றுள் உயிர்களுக்குச் செய்யும் சேவை தலையாயது என நான் கருதுகிறேன். அதனால்தான் உயிரினங்களுக்குச் சிறப்பாகச் சேவையாற்றக்கூடிய வைத்தியத் துறையை நான் தேர்ந்தெடுத்தேன்.

எனது இலட்சியமான வைத்திய சேவையில் வைத்தியர், தாதி ஆகிய இரண்டு பதவி நிலைகளும் எனது இலட்சியத்தின் தோற்றுவாய்கள் எனலாம். இந்த இரு பணிகளின் மூலமாக, பணம் சம்பாதித்தல் என்ற பொதுவான இலக்குக்கும் அப்பாலே, மனித

குலத்திற்குத் தேவையான உண்மையான சேவையை ஆற்ற முடியும். அதையே நான் விரும்புகிறேன்.

தீராத நோய்வாய்ப்பட்ட நோயாளிகள் படும் வேதனைகள் கணக்கில் அடங்காதன. நல்ல வைத்திய சேவைகள் இன்மையாலும், அன்பான கரிசரணையான பராமரிப்புக் குறைவாலும் அவர்கள் வைத்தியத் துறையையே தவறாக மதிப்பிடுகின்றனர்.

ஆகவே இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். அதனை நோக்கமாக கொண்டதே எனது இலட்சியமாகும். முடிவாக வைத்தியத் துறையில் இணைந்து எனது இலட்சியத்தை நிறைவேற்ற என்னால் முடிந்த முயற்சிகளை எடுப்பேன்.

## பாடசாலை விளையாட்டுப் போட்டி

*-வைஸ்ணவி கிரிதரன்-*

சென்ற கிழமை எனது பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டிக்கு நான்கு இல்லங்களில் இருந்து மாணவர்கள் பங்கு பற்றினார்கள். நான்கு இல்லங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு இல்லமும் அலங்கரிக்கப்பட்டது. இந்தப் போட்டி காலை ஒன்பது மணி தொடக்கம் பின்னேரம் மூன்று மணி வரை நடைபெற்றது. மஞ்சள், நீலம், பச்சை மற்றும் ஊதா நான்கு இல்லங்களுக்கான வர்ணங்களில் மாணவர்கள் உடைகளை அணிந்திருந்தார்கள். போட்டிகளில் மாணவர் தங்களது திறைமைகளைக் காட்டினார்கள்.

நானும் எனது நண்பர்களுடன் சில போட்டிகளில் பங்குபற்றினேன். நான் ஓட்டப் போட்டி, குண்டு எறிதல் மற்றும் நீளம் பாய்தலில் பங்கு பற்றினேன். மதிய நேரத்தில் களைத்துப் போன மாணவர்கள் சிற்றுண்டி சாலையில் உணவுப் பொருட்களை வாங்கி உண்டனர். அஞ்சல் ஓட்டப் போட்டி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடைபெற்றது. எல்லாப் போட்டிகளும் முடிவடைந்தவுடன் அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்கள். கடைசியாக மாணவர்கள் மகிழ்ச்சியாகப் பாட்டுப் பாடி நடனம் ஆடினார்கள்.

## நாமே எமது முதல் எதிரி

-துவிஜன் பசுபதிதாசன்-

இவ்வுலகத்திலேயே மனிதர்களுக்கு அத்தியாவசியமான விடயம் என்னவென்று நாம் சிந்தித்தால், அது மனம்தான். ஒருவரின் வளர்ச்சிக்கும் திறவுகோல் மனம் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் இதே மனம்தான் வரலாற்றில் மிகப்பெரிய குணசாலிகளின் பேரழிவுக்கு காரணமாக இருந்திருக்கிறது. இன்று இதனை எழுதும் நானும் என் மேல் கருணை காட்டி வாசிக்கும் நீங்களும் மனதில் ஏற்படும் உணர்ச்சிகளால்தான் இங்கு இருக்கிறோம். ஆனால் இதற்குள் "தடை" என்னும் ஒரு விடயம் நுழையும்போதுதான் வாழ்க்கையே மாறுகிறது. தடுக்கை, இடையூறு, மறுப்பு என்பதே தடை என்ற ஒரு வார்த்தைக்கு பொதுவாக அகராதியின் மூலம் கொடுக்கப்படும் வரையறை: தடுக்கை, இடையூறு ஆகும். ஆனால் இன்றைய சமுதாயத்தில் நம்மில் பலர் தடை என்ற ஒரு வார்த்தையை மனதில் கொண்டு முடியாது என்று எண்ணுகின்றோம். ஆதலால் நாமே எமது முதல் எதிரி.

வாழ்க்கையில் எமது மனம் ஒன்றை தடை என்று கருதும் வரை அது தடை ஆகுவதில்லை. எமது வாழ்வில் உண்மை ஏது? எமது வாழ்க்கையில் எமது சிந்தனைகளைத் தவிர வேறு ஒன்றையும் நாம் ஐயத்திற்கு இடமின்றி உண்மை என்று கருத முடியாது. இப்படி கருதியது எந்த மூடன் என்ற கேள்வியை பலர் கேட்கலாம். ஆனால் இதுவரை நாம் பார்த்தது மகிழ்ந்த முழு வாழ்க்கையுமே ஒரு கனவாகக்கூட இருக்கலாம். கண்களால் பார்ப்பது எல்லாம் உண்மையில்லை. காதுகளால் கேட்பது அனைத்தும் உண்மையில்லை. காதுகளால் கேட்பது அனைத்தும் நிஜமில்லை. அறிவின் ஊடாக நாம் தீர விசாரித்து அறிவதும் சாத்தியமில்லை. எமது சிந்தனைகளும் மனதையும் அனைத்துமே மாயை என்று கருதலாம். ஆயினும் இறுதியில் நாம் அனைவருமே வெளி உலகத்தில் இருக்கும் தடைகளின் மேல் குற்றம் சுமத்துகிறோம். மனதிற்குள் இருக்கும் மாயையை கண்டு, நாமே எமக்கு முடியாது என்று கூறி, தடை போடும் நாம் தான் இச்சமயத்தில் குற்றவாளிகள். எதிரிகள்.

மேலும் ஒரு தருணத்தில் ஒரு விடயம் எமக்கு வெற்றிகரமாக முடியாவிட்டால் அது எமக்கு முடியாது என்று ஒரு தடையை உருவாக்கின்றோம். அனைவருக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெற்றி தேடி வருவதில்லை. அனைத்தையும் ஆண்டவன் படைத்தான் என்று நம்பும் கடவுள் நம்பிக்கை உடையவர்களின் இறைவனுக்கு கூட சில சமயங்களில் சிலதை சாதிக்க முடியாமல் போயிருக்கும். இறைவனுக்கு எல்லையற்ற ஆற்றல் என்று கருதுகின்றோம். ஆனால், இந்த

எல்லையற்ற ஆற்றலை வைத்துக்கொண்டு இறைவனால் தூக்கவே முடியாத ஒரு பாறாங்கல்லை சில சமயங்களில் உருவாக்க முடியாமல் போகலாம். இதனை உருவாக்கினால், தூக்கவே முடியாத பாறாங்கல்லை இறைவனாலும் தூக்க முடியாது. ஆயினும் இச்சந்தர்ப்பத்தில் இறைவனின் ஆற்றலுக்கு எல்லை உண்டு. ஆனால் அதே சமயம் இறைவன் தான் உருவாக்கிய ''தூக்கவே முடியாத'' பாறாங்கல்லை தூக்கினால் பின்னர் இறைவனுக்கு தூக்கவே முடியாத பாறாங்கல்லை உருவாக்க முடியாது என்றுதான் அர்த்தம். ஆயினும், கடவுளை நம்புபவர்கள் கூறுவதின்படி எல்லாம் படைத்த இறைவனுக்கே சில விடயங்கள் முடியாமல் போகும் போது, சாதாரண மனிதர்களாகிய நாம் தோல்வியை காண்பதே இயல்பு. ஆனால் இதை கண்டு எமக்கு நாமே மனதில் தடைகளை உருவாக்குவதே முட்டாள்தனம்.

முக்கியமாக எமது மனதில் இருக்கும் பயமே எமக்கு மிகப் பெரிய அழிவை ஏற்படுத்துகின்றது. உயிரியல் ரீதியில் பயம் என்பது நாம் ஆபத்திலிருந்து பிழைப்பதற்காக ஏற்படும் உள்ளுணர்வு ஆகும். ஆனால், இன்று மானம் போய்விடுமோ என்ற உணர்வாகிய தடையினால் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய முட்டாள்த்தனம் ஆகிவிட்டது.

''மயிர் நீப்பின் வாழாக்கவரிமா வன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்''

ஓர் உரோமம் உடலிலிருந்து உதிர்ந்தாலும் உயிர் விடும் கவரிமான் போல் மானம் போக நேரின் பெரியோர் உயிரைத் துறப்பார்கள் என்று வள்ளுவர் கூறியுள்ளார். பலர் பெரியோர் ஆகவேண்டும் என்ற பேராசையில் தமது வாழ்க்கையை முடித்துக் கொள்வார்கள். இவ்வாறான கருத்துக்களை அறிந்துவிட்டு தோல்வி அடைந்து மானம் போனால் வாழ்க்கையே இல்லை என்ற ஒரு தடையை உருவாக்கி நாமே எமக்கு முதல் எதிரியாய் திகழ்கின்றோம். மானம் என்பதே தன் நிலையிலிருந்து வழுவாமை என்ற பொருளோடுதான் உருவாக்கப்பட்டது. ஆனால் இதைப் பின்பற்றும் பலர் பயத்தின் உச்சத்தில் இருக்கும் போது அவர்களுக்கு தன்னிலை ஏது?

நாமே எமக்கு முதல் எதிரி. எமது மனதிற்குள் நாம் உருவாக்கிக்கொள்ளும் தடைகளே எமது வாழ்க்கையை எம்மால் முழுமையாக அனுபவிப்பதற்கு தடையாக அமைகின்றன. வெளியே பிரச்சினை ஏதும் இல்லை. உள்ளேதான் அடித்தளம். பயம், கோபம் போன்ற அனைத்துமே எம்மில் இருக்கும் ஒரு கொடூர போதைப்பொருள் மாதிரி. இவ்வாறான போதையில் மயங்கி இருப்பவர்களுக்கு நண்பன் ஏது, எதிரி ஏது என்று கூட தெரியாது. இவர்களுக்கு மனத்தடை என்னும் போதையிலிருந்து தெளிந்து சாதனை படைக்கும் வரை நாமே நமக்கு முதல் எதிரி!

## பருவத்தே பயிர்செய்

*-கிரிசிகன் சீவராஜா-*

ஒரு ஊரில், கமலன் என்ற ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய பெற்றோர் ஒரு சாதாரண,நல்ல குடும்பத்தை சேர்ந்தவர்கள். கமலன் சிறுவயதிலேயே பாடசாலைக்கு சென்று நன்றாக படித்து வந்தான்.

அவனுடைய பக்கத்து வீட்டில் நிமலன் என்ற ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய பெற்றோர் மிகவும் வசதி படைத்தவர்களாக இருந்தார்கள். கார், வீடு, தோட்டம், தொழில் என எல்லாம் வசதியும் இருந்தது. ஆனால் நிமலன் பாடசாலைக்கு போகாமல் விளையாடித் திரிந்தான். அவனது பெற்றோர் அவனை வற்புறுத்தியும், அவர்களின் சொல் கேளாமல், படிக்காமல், தீய நண்பர்களுடன் சேர்ந்து காலத்தை வீணாக்கினான். நாட்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக நகர்ந்து சென்றன.

தினமும் பாடசாலைக்கு செல்லும் கமலனை அயல் வீட்டு நண்பன் நிமலன், தன்னுடன் விளையாட அழைப்பான். கமலன் வந்து சிறிது நேரத்திற்கு விளையாடி விட்டு, வீட்டிற்கு சென்று நன்றாக படித்து வந்தான். இதை கண்ட நிமலன் மற்ற நண்பர்களுடன் சேர்ந்து ஏளனம் செய்வான். அப்போது கமலன், "நாங்கள் படிக்கிற நேரத்தில் படித்தால்தான், பின்பு எல்லாவற்றையும் செய்யலாம். அதனால், உனது பெற்றோர் சொல்வது கேட்டு, பாடசாலைக்கு வந்து படித்தால், உனக்கு மிகவும் நல்லது. "என்று சொன்னான். அதற்கு நிமலனோ " எங்களிடம் எல்லாம் வசதிகளும் உள்ளது. நான் படிக்க தேவையில்லை" என்று சொல்லி மீண்டும் கமலனை ஏளனம் செய்தான். ஆனால் கமலன் நிமலனின் அறியாமையை எண்ணி மனம் வருந்தி தான் மிகவும் நன்றாக படித்து பெரியவனாகி இறுதியில் ஒரு சிறந்த சட்டத்தரணி ஆகினான். பின்பு தனது வேலையை நன்றாக செய்து தனது பெற்றோரை நன்றாக கவனித்து வந்தான்.

காலங்கள் கடந்து சென்றன... திடிரென ஒரு நாள், நிமலனின் பெற்றோர் ஒரு விபத்தில் சிக்கியதால் வேலைக்கு போக முடியாமல் போயினர். அதனால் அவர்கள் வேலையை இழக்க நேரிட்டது. இதனால் வருமானம் இல்லாமல் அவர்களது தோட்டம், கார், வீடு என அனைத்தையும் இழந்து வறுமையில் வாடினர். இந்த நிலையில் நிமலன் மிகவும் கவலையுடன், வேலையையும் தேட ஆரம்பித்தான். அவன் எதுவும் படிக்காததால் ஒரு வேலையும் கிடைக்கவில்லை. இறுதியாக அவனுக்கு ஒரு கடையில் கூலி வேலை கிடைத்தது. அந்த வேலையிலிருந்து வரும் சிறிய பணத்தை வைத்து, பெற்றோரை கவனித்து வந்தான். இந்த நேரத்தில் தான் சிறுவயதில் பாடசாலைக்கு செல்லாமல் படிக்காமல் இருந்ததனால், கிடைத்த பலனை எண்ணி, மிகவும் மனம் வருந்தினான். "சிறுவர்களாகிய நாம், படிக்கிற நேரத்தில் படிக்கவேண்டும்."

## இலங்கை

-புவி ராஜகுமாரன்-

இந்திய துணைக் கண்டத்தின் தென் கிழக்கு கரைக்கு அப்பால் இந்து சமுத்திரத்தில் ஏறத்தாழ 20 மில்லியன் மக்கள் வாழும் ஒரு தீவு இலங்கை ஆகும். இதன் தற்போதைய அதிகாரபூர்வ பெயர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு ஆகும். 1972க்கு முன் உலகம் முழுவதும் சிலோன் என்ற பெயரால் அறியப்பட்டு வந்தது.

இலங்கையின் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு மூவாயிரம் ஆண்டுகளைக் கொண்டது. இதன் புவியியல் அமைவு மற்றும் ஆழமான திருகோணமலை துறைமுகம் என்பன புராதன பட்டுப் பாதை காலம் தொட்டு இரண்டாம் உலக யுத்தம் வரை தந்திரோபாய முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது.

இலங்கை பல சமய, இன, மொழிகள் பேசுவோரின் தாயகமாக உள்ளது. இது சிங்களவர், இலங்கை தமிழர், இந்திய வம்சாவளி தமிழர் மற்றும் முஸ்லிம்களின் தாயகமாகும்.

இந் நாட்டில் தற்கால வரலாறு மூன்று தசாப்த கால ஈழப்போரில் அகப்பட்டு மே 2009ல் இராணுவ ரீதியில் வெற்றியுடன் முடிவுக்கு வந்துள்ளது. இந் நாடு நீண்டகால பண்பாட்டு வரலாற்றைக் கொண்டது.

இலங்கையின் முக்கிய நகரங்களான கண்டி, காலி, குருநாகல், அநுராதபுரம், யாழ்பாணம், நுவரேலியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு காணப்படுகின்றன.



**மழலைத் தமிழ்**



-ஆவூரான்-

தத்தித் தத்தி வா
தமிழ் பழகத் தாய்
மொழியால் நீ பேச

அன்னை ஊட்டும் பாலை விட
அன்னைத் தமிழ் அமுதல்லவோ
உன்னைத் தூக்கி நான் படிக்க
இருக்கு நிறையத் தமிழ்ப்
பாட்டல்லவோ

சின்னச் சின்ன விரல்
நான் பிடித்து செந்தமிழை
நீ எழுத சொல்லிச் சொல்லித்
தரும்போது சுகங்கள் கோடி
வருமல்லவோ

கைவீசி நடந்து வரும்
கண்கொள்ளாக் காட்சி-என்
கண்ணிரெண்டு போதவில்லை
மெய் சிலிர்ப்பதே சாட்சி

துள்ளி நீ குதிக்க

துவளுது என் மனதடி

அள்ளித் தோளில் வைத்து

ஆடுகிறேன் கூத்தடி

சின்னச் சின்னக் கனவுகள்

செதுக்கி வைத்தேன் மனதிலடி

தங்கத் தமிழ் உரைத்து

தலை நிமிர்ந்து நீ பெற்ற

பரிசு தனை  தாவி நான் பறித்து

மகிழ்ந்திருவேன்  கண்ணில்

நீர் வர.......

## அவுஸ்திரேலியா

**-அபிராமி கிரிதரன்-**

அவுஸ்திரேலியா தென் அரைக் கோளத்தில் இருக்கிற அழகான நாடும் தனிக் கண்டமும் ஆகும். இங்கு வாழும் மக்களின் முக்கிய மொழி ஆங்கிலம். அவுஸ்திரேலியாவுக்கு வெளிநாட்டிலிருந்து பல உல்லாசப் பயணிகள் ஒவ்வொரு வருடமும் வருவார்கள். ஆனால், ஏன் எல்லோரும் எங்கள் நாட்டை விரும்பி வருகிறார்கள்?

அவுஸ்திரேலியாவில் பல சுவாரஸ்யமான விலங்குகள் உள்ளன. கங்காரு,வோம்பட், ஈமியு, டிங்கோ, குக்குபரா, சிலவகை பாம்புகள் மற்றும் முதலை போன்ற மிருகங்களை இந்த நாட்டில் பார்க்கலாம். இப்படி கண்கவர் விலங்குகளை இங்கு காணமுடியும்.

அவுஸ்திரேலியாவில் பல சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறும். டெனிஸ், கால்பந்து, கிரிக்கெட், நீய்ச்சல், ரக்பி மற்றும் கூடைப்பந்து சம்பந்தப்பட்ட போட்டிகள் வருடம் முழுக்க நடக்கும். சில மக்கள்

இதை பார்க்கவும் தங்களது நாட்டின் குழுவை ஆதரிக்கவும் இங்கு வருவார்கள்.

அவுஸ்திரேலியாவில் பல இயற்கையான அமைப்புகள் இருக்கிறது. இங்கு கடற்கரை, காடுகள், நீர் வீழ்ச்சிகள், மலைகள், அருவிகள், ஆறுகள் மற்றும் பாலைவனங்கள் உள்ளன. மக்கள் எங்கள் நாட்டின் இயற்கையான அழகை பார்த்து ரசிக்க வருவார்கள்.

அவுஸ்திரேலியாவுக்கு ஒவ்வொரு வருடமும் ஆறு மில்லியன் உல்லாசப் பயணிகள் வெளி நாடுகளிலிருந்து வருவார்கள். அவர்கள் எங்கள் நாட்டைப் பார்த்து ரசிப்பார்கள்.

## நான் சந்தித்த சுவாரசியமான மனிதர்!


**-கவிஷ் சண்முகம்-**

நான் சந்தித்த சுவாரசியமான மனிதரின் பெயர் கண்ணையன். இவரை எனக்கு கடந்த ஏழு வருடங்களாக தெரியும். இவர் மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் வசித்து வருகிறார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தியா வரும்போது அவரை சந்தித்து இருக்கிறேன்.

என்னுடன் அன்பாகவும் பாசமாகவும் இருப்பார். என்னை தூக்கிவைத்துக் கொண்டாடுவார். அவர் மலேசியாவிலிருந்து இந்தியா வரும்போதெல்லாம் புத்தாடைகளும் பொம்மைகளும் மற்றும் சாக்லேட்டுகளும் வாங்கி வருவார். அவருடன் பல சுற்றுலா இடங்களுக்கு சென்றிருக்கிறேன். அவர் கடந்த நாற்பது வருடங்களாக தனியாகத் தொழில் நடத்தி வருகிறார். அவர் குடும்பம் இந்தியாவில் இருக்கிறது. அவருக்கு இப்போது எழுபது வயது ஆகிறது. இந்த வயதிலும் அவர் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார். இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இந்தியா வந்து ஆறு மாதம் தங்குவார். இதுதான் அவரின் விடுமுறை.

ஐம்பது வருடங்களுக்கு முன்பு, சாதாரண ஊழியராக சேர்ந்து கடுமையாக உழைத்து முன்னேறி இந்த நிறுவனத்திற்கு தலைவராகி நடத்தி வருகிறார். அவருக்குக் கீழே இருபது நபர்கள் வேலை செய்கிறார்கள். இதற்கு எல்லாம் காரணம் அவரின் உழைப்பும் ஒழுக்கமும் மற்றும் விடாமுயற்சி ஆகும்.

அவர் இந்தியா வருகிறார் என்றால் அனைவரும் குடும்பத்துடன் சென்னை விமானநிலையத்திற்கு சென்று வரவேற்போம். நான் இப்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிப்பதால் அவரை அடிக்கடி சந்திக்க முடியாமல் வருத்தமடைகிறேன். தொலை பேசியில் பேசி ஆறுதல் அடைவேன். அவர் வேறு யாருமல்ல. என்னுடைய இனிய மதிப்பிற்குரிய தாத்தா தான் அவர்.


VARSHNA

## புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள்...

-வைஷ்ணவி சிவா-

புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் நிறைய இருக்கின்றன. தமிழ் பெண்கள் புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள பிரச்சனைகளை தாண்டி வாழ பழகிக்கொள்ள வேண்டும். அவை பணப் பிரச்சினைகள், மொழி பிரச்சினை, உணவுப் பழக்க வழக்கங்கள், வேலைப் பிரச்சினைகள் மற்றும் கலாசாரமும் உடற் பயிற்சி முறைகளும் அடங்குகின்றன.

பணப் பிரச்சினையை எதிர் நோக்குவதால் பெண்கள் வேலைக்கு போவது மிகவும் அவசியமாகிறது. தமிழ் பெண்கள் ஆங்கில மொழியை புலம் பெயர்ந்த நாடுகளில் படிப்பது அவசியமாகிறது. மொழியை அறியாவிடில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வது, வேலைகள் செய்வது கஸ்ரமாகிறது.

இந்த நாடுகளில் பல்வேறு இன மக்களும் அவர்களுடைய கலாசாரங்களும் நம் கலாசாரத்திலிருந்து வித்தியாசமாக இருப்பதால் நாம் அதற்கு ஏற்றபடி வாழப் பழகிக்கொள்வது அவசியமாகிறது. அதேபோல் பிள்ளைகளின் வளர்ப்பு முறைகளும் மாறுபடுகின்றன. ஆனாலும் நம் பிள்ளைகளுக்கும் எம் கலாசாரத்தையும், தமிழ் மொழியையும் பேணி வளர்ப்பது எமது கடமை ஆகிறது.

அத்தோடு கால நிலைகளுக்கு ஏற்ப உடைகளும் அந்தந்த நாடுகளுக்கேற்ப வேறுபடுகிறது. உணவு பழக்க வழக்கங்கள் மிகவும் மாறுபட்ட விதத்தில் காணப்படுகின்றது. இதனால் உடற்பயிற்சி முறைகளும் கைக்கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

## கல்வி

-வெண்ணிலா-

கல்வி என்பது நமது வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானதும் உயர்வானதும் ஆகும். நம் எல்லோருக்கும் கல்வி மிகவும் நம்பிக்கையை ஊட்டும். அத்துடன் எம் வாழ்கையில் நாம் கற்கும் கல்வி நம்மை பெரிய நிலைக்கு கொண்டு வரும். அதனால் கல்வி என்பது எம் வாழ்க்கைக்கு மிகச் சிறந்த ஒன்றாகும்.

கல்வி கற்பதனூடாக நாம் நிறைய விடயங்களை அறிந்து கொள்கின்றோம். அத்துடன்

சிறுவயதிலிருந்து நல்ல பழக்க வழக்கங்களை பேணுகின்றோம். கல்வி கற்பதால் வாழ்க்கையின் முக்கியமானவற்றை அறிகிறோம். ஏழைகளிலிருந்து பணக்காரர் வரைக்கும் கல்வி முக்கியமானதாகும். ஏழைகள் கல்வி கற்பதனால் பிற்காலத்தில் நல்ல நிலையில் இருக்கின்றார்கள். இவ்வகையில் கல்வி மிகவும் உதவியாக உள்ளது.

கல்வியினூடாக எல்லோருக்கும் நல்ல பண்பு, குணம் மற்றும் பின்பு நல்ல வேலை கிடைக்கின்றது. அதனால் சிறுவயதிலிருந்து கல்வி கற்பது நன்மையும் முக்கியமும் ஆகும். இதுதான் சிறுவர் வாழ்க்கைக்கும் மிகவும் அவசியமாகும். பின்பு கற்ற கல்விக்கு ஏற்றமாதிரி வாழலாம். கல்வி மிகவும் முக்கியமாகும். அதனால்தான் திருவள்ளுவர் கூட "கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக" என்று திருக்குறளில் கூறியுள்ளார்.

அத்துடன் பல கவிஞர்கள்கூட கல்வியைப் பற்றி பல கவிதைகள் எழுதியுள்ளனர். அத்துடன் அதன் விளக்கத்தையும் கூறியுள்ளனர். இவ்வாறு நிறைய இவ்வுலகத்தில் கல்வியைப் பற்றியும் கல்வியின் முக்கியத்தைப் பற்றியும் கூறி இருக்கின்றனர். அதனால் நாம் சிறுவயதிலிருந்து கல்வி கற்று நலமாக வாழ வேண்டும். இதுதான் நம் வாழ்க்கைக்கும் மிகவும் சிறந்த ஒன்றாகும்.

## அன்பு..

-நவநீதன் நவரட்னம்-


அன்பு, காதல், எழில், நெஞ்சம் என்பவற்றில்
அருமையாய் எழுதுவதற்கு எதை எடுப்பேன்
அன்பில்லா காதலும் தான்- இங்கு
அதிக நாட்கள் நிலைத்திடுமோ?
அன்பில்லா வீரமும் நம் முன்னே
அதி பெருமை அடையாதோ?
பண்பான எழில் கொண்டால்

## அன்புதான் வேண்டாமோ?

நெஞ்சமதில் மிகையான அன்புதான்
நிலைத்து நாளும் நிற்காவிட்டால்
பஞ்சாய் போய் விடும்
பார் போற்றும் நெஞ்சத்தின் பெருமையெல்லாம்
தந்தையவர் செய்கின்ற அன்புமிங்கே
தயவாக இருக்கின்ற போதிலுமே
குரு எங்கள் மீது வைக்கின்ற அன்பதுவோ
வரும் கால வாழ்வினிலே எமை வழி நடத்தி சென்றிடுமாம்.

தாய் போற்றும் அன்புதனை கூற
தரணியிலே எங்கிருந்தும்
வாய் போற்றும் வார்த்தை தான்
வந்தென்னை அடையவில்லை
சேயாக இருக்கின்ற நாள் தொடங்கி
செம்மையாக இருந்திடுமே அவள் அன்பு
ஓயாது அன்பு செய்யும் அவள் உள்ளம்
ஒருபோதும் மறப்பதற்கு முடியாதொன்றே.

பணத்துக்காய் அன்புவைக்கும்
பகட்டான பெயர் வழிகள்
பிணமாகும் நேரமதில்
பிரிந்தே சென்றிடுவர்
கணபொழுது சிந்தியுங்கள்
கண்ணியமாய் வாழ்கின்ற மானிடரே
நிஜமான வாழ்வினிலே
நிலையானது பணமா? பாசமா?



பிறை

சூடிய

பிள்ளையார்

ஆகாஷ் - 9

## நெருடல்!



-சரணியா சத்தியன்-

இந்த ரிசெப்சனுக்கு வருவதற்கு எனக்கு பிடித்தம் சுத்தமாக இல்லாத போதும் எனது அப்பாவின் வேண்டுகோளுக்காகவே இங்கு வந்தேன். மணமகனின் தந்தை எனது அப்பாவின் நெருங்கிய நண்பர். எனது அப்பாவும் அம்மாவும் அக்காவைப் பார்ப்பதற்காக அவிஸ்திரேலியா சென்றுள்ளனர். எனது வேலை நிமித்தமாக என்னால் அவர்களுடன் செல்ல முடியவில்லை. அச்சமயத்தில் தான் தாமோதிரம் மாமா தனது மகனின் கல்யாண அழைப்பிதழுடன் வீட்டிற்கு வந்தார். அப்பா கட்டாயம் இக் கல்யாண வீட்டிற்கு போக வேண்டும் என்று சொன்னதால்தான் நான் இங்கு வந்தேன்.

கொழும்பு மியாமி மண்டபத்தில் மிகவும் பிரமாண்டமாக ஏற்பாடுகள் செய்துள்ளனர். அதோ மணமகன் கோட் சூட்டுடனும், மணமகள் காகிறா சோலியுடனும் அழகாக மண்டபத்தினுள் பிரவேசிக்கின்றனர். மிகவும் பொருத்தமான ஜோடி இது என மனதில் தோன்றியது. அவர்களின் வருகையைத் தொடர்ந்து கொண்டாட்டங்கள் ஆரம்பமானது. அப்பொழுதுதான் நான் அதைக் கவனித்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. அதுவும் தாமோதரம் மாமாவின் மகனின் திருமணத்தில் நான் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அது மது. எல்லோருக்கும் புரியும் மொழியாயின் ஸ்காட்ச், வைன், விஸ்கி மற்றும் இன்னும் பல பெயர்கள்.

மணமகனின் நண்பன் ஒருவர், மணமக்களை மது கோப்பைகள் கூம்பாக அடுக்கப்ப்ட்டிருந்த இடத்தை நோக்கி அழைத்துவந்து மது போத்தல் ஒன்றை கொடுக்க, மணமக்கள் அதனைக் குழுக்கி திறந்து அக் கோப்பைகளில் ஊற்றினார்கள். அதனைத் தொடர்ந்து எல்லோருக்கும் மது கோப்பைகள் வழங்கப்பட்டன.

இன்னும் என்னால் இதை நம்ப முடியவில்லை. என் நம்பாமைக்குக் காரணம் திருமண வீடென்பது மது பகிரப்படுவதற்காக இல்லை. இக் காலத் திருமணங்களில் இது சகஜமே. ஆனால் தாமோ மாமா வீட்டுத் திருமணத்தில் இது நடைபெறுவதே என் ஆச்சரியம். அதற்கு காரணம் என் அப்பா. அவர் தாமோ மாமா பற்றி கூறிய ஒரு கதை.

அது நடேசன் என்பவரைப் பற்றிய கதை. அவர் தாமோ மாமாவின் சித்தப்பா. நடேசன் சரியான குடிகாரர். அவர் ஆறடி உயரமும், வெள்ளை நிறமும், கருமையான தலைமுடியுமென பார்ப்பதற்கு சிவாஜி போல் இருப்பார். மிகவும் நல்ல மனிதர். பெரியோர்களுக்கு மரியாதையும் எல்லோருக்கும் உதவும் குணமும் என

மிகவும் நல்லவர். ஆனால் அவரிடம் இருந்த ஒரே குறை குடிப்பழக்கம். மாலை வேலையிலிருந்து வீடு திரும்பும்போது எப்பொழுதும் குடித்து விட்டே வருவார். நிதானம் இல்லாமல், ஆடை ஒழுங்காக இல்லாமல் தள்ளாடிய படியே அவர் வருவதைப் பார்ப்பதற்கே என் அப்பாவிற்கு அருவருப்பாக இருக்கும் என்று கூறியுள்ளார். அப்பாவிற்கு மட்டுமல்ல, அவர்கள் ஊரில் யாருக்கும் அவரைப் பிடிக்காது. ஏனெனில் அவர் குடித்துவிட்டு வந்து சத்தமாக கத்துவதும், மனைவியுடன் சண்டை இடுவதும், அயலவர்களுடன் தகறாறு செய்வதுமாக இருப்பார். தாமோதிரத்தின் தந்தைக்குத் தன் தம்பியை நினைத்து மிகவும் கவலையாக இருந்தார். நடேசன் குடித்து விட்டு புரியும் அனைத்து தகராறுக்கும், தப்புக்கும் தாமோதிரத்தின் தந்தையே பொறுப்பேற்பார். இதனால், தாமோதிரத்திற்கு அவன் சித்தப்பாவை பிடிக்காமலே போய் விட்டது. சித்தப்பாவை மட்டுமல்ல குடி என்கிற வார்த்தையையே வெறுத்தார். தனது தந்தையின் தலைகுனிவுக்கும், தனது நண்பர்கள் தன்னை கேலி பேசவும் காரணமான மதுவை அவர் வெறுத்தார் என்று கூறியுள்ளார் எனது அப்பா.

அது மட்டுமல்ல அவர்கள் இருவரும் பல்கலைக்கழகத்தில் இருக்கும் போது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப் பற்றி எப்பொழுதும் கூறக் கேட்டுள்ளேன். பல்கலைகழகத்தில் அவர்களது நண்பர்கள் பலர் குடிப்பார்களாம். விழாக்கள், விசேட நாட்கள் போன்றவற்றில் எல்லோரும் குடிப்பது வழக்கம். இவர்கள் நண்பர்கள் குழாமில் இவர்கள் இருவர் மட்டுமே குடிக்க மாட்டார்கள். அவர்கள் குடிக்கத் தொடங்கினால் அவ்விடத்தை விட்டு நகர்ந்து விடுவார்கள். ஒரு முறை இவர்கள் பரீட்சை முடிந்த சந்தர்ப்பத்தில் நண்பர்களோடு கடற்கரை சென்றுள்ளனர். அப்பொழுது அவர்களின் நண்பர்கள் மது போத்தல்களை எடுத்து வந்தது அவர்களுக்குத் தெரியாது. நண்பர்கள் குடிக்கத் தொடங்கவும் தாமோ மாமாவிற்கு அது சுத்தமாக பிடிக்கவில்லை. எனது தந்தையை அழைத்து கொண்டு விடுதிக்குச் செல்ல ஆயத்தமானார். அப்பொழுது அவரின் நண்பர் ஒருவர்,

"என்ன தாமோ, ஏன் எப்பவும் இப்படி பிஹேவ் செய்கிறாய். நாங்கள் ஒன்றும் மொடா குடியர்கள் இல்லை. இது ஒரு ஃபன். அவ்வளவுதான்" என பலவாறு கூறி ஒரு கோப்பை மதுவாவது தங்கள் நட்புக்காக குடிக்க கூறினர். அப்பொழுது எனது அப்பாவும் கூட "ஏன்டா தாமோ, ஒருதடவை தானே, ஒரு கப் டேஸ்ட் பண்ணலாம் வாடா" என்று கூறினாராம். அவ்வளவு நேரமும் அமைதியாக மறுத்துக் கொண்டிருந்தவர் அப்பாவின் கூற்றைக் கேட்டு கொதித்துவிட்டார்.

"நீ என்ன பைத்தியமா... உன் புத்தி ஏன் இப்படி போகுது. ஒரு நாள்தானே குடிக்கவா என்று கேட்கிறாய். என்னை பொறுத்த வரை தினம் தினம் குடிப்பவனும்

குடிகாரன்தான். அவ்வவ்போது just for fun என்று சொல்லி குடிப்பவனும் குடிகாரன்தான். உன்னை மாதிரி ஒரு தடவை just for taste என்று சொல்லி குடிப்பவனும் குடிகாரன்தான். மது ஒரு போத்தலும் சரி ஒரு துளியும் சரி விஷம் தான். அது வாழ்க்கையின் சாபம். அதை நான் என்னுடைய சித்தியின் ஒவ்வொரு கண்ணீர் துளியிலும், என் அப்பாவின் தலைகுனிவிலும், ஊராரின் ஒவ்வொரு கேலிப் பேச்சிலும் அதனை உணர்ந்திருக்கிறேன். இது எல்லாத்துக்கும் காரணமான குடியை நான் வெறுக்கிறேன். அத நான் என் வாழ்க்கையில் ஒரு நாளும் தொடமாட்டேன். அப்படி குடிச்சாதான் நம்ம நட்பு நிலைக்கும்னா எனக்கு அப்படி ஒரு நட்பே தேவையில்லை" என்று கூறி சென்றுவிட்டாராம்.

அன்றைக்குப் பின் என் அப்பாவிற்கு எப்பொழுதுமே குடிக்க வேண்டும் என்று தோன்றியதில்லை என கூறியுள்ளார். மதுவைப் பார்த்தாலே தாமோதரன் "நீ குடிகாரன்" என்று கூறுவது போல் இருக்குமாம். இதனைக் கூறும்போது எனது அப்பாவின் முகத்தில் தாமோ என் நண்பன் என்ற பெருமை மின்னுவதை பார்த்திருக்கின்றேன். ஏன் இதுவரை நானும் கூட குடித்ததில்லை. என் நண்பர்கள் பலர் குடித்தாலும், அது தவறில்லை என எனக்குத் தோன்றினாலும் ஒரு போதும் குடிக்கத் தோன்றவில்லை. அது தாமோ மாமாவின் கதையை கேட்டதினாலோ என்று பல தடவை நினைத்ததுண்டு.

அப்படிப் பட்ட தாமோ மாமா எவ்வாறு இதற்கு சம்மதித்தார் என்று என் மனதில் கேள்வி எழுந்தது. அதே கேள்வி இன்னொருவருக்கும் எழுந்தது போலும்.

தாமோ மாமாவின் நண்பர் ஒருவர் அவரிடம் வினவுவது என் காதில் விழுந்தது.

"என்னடா தாமோ, உன் மகன் கல்யாண வீட்டில குடிக்க விட்டிருக்கிறாய். அதுவும் இன்னிக்குத் தான் அவன் வாழ்க்கை ஆரம்பிக்கப் போறான். அதை இப்படியா தொடங்க வேணும்" என்று வினவினார்.

என் மனதில் தாமோ மாமா எனக்கு இதில் சம்மதம் இல்லை எல்லாம் மகன் செயல் என்று கூறுவார் என நினைத்தேன். அந்தோ பரிதாபம் என் நம்பிக்கை பொய்த்து விட்டது.

"அட போடா. இப்ப எல்லா ரிசெப்சனிலும் மது இருக்கு. அது இருந்தா தான் நம்ம ஸ்டேடஸுக்கு நல்லா இருக்கும். அந்த காலத்தில தான் குடிச்சா குடிகாரன், இப்ப குடிக்காட்டி அது மரியாதை இல்லை. ஏன்னா இப்ப மது என்கிறது ஒரு ஸ்டேடஸ் சிம்பொல். இந்த மாதிரி எல்லாம் செய்தா தான் எனக்கும் என் மகனுக்கும் மரியாதை." என்றல்லாவா கூறிவிட்டார்.

நம்பவே முடியவில்லை. தாமோ மாமாவா பேசியது. குடி வாழ்க்கையின் சாபத்திலிருந்து எப்பொழுது அடையாளமாக

மாறியது. விஷத்திலிருந்து எப்பொழுது அமுதமாக மாறியது. எவ்வாறு எதனால் தாமோ மாமா மாறினார். நண்பர்களின் தவறான போதனையா, மேல் நாட்டு நாகரீகத்தின் கவர்ச்சியா அல்லது வெளி நாட்டு மோகமா. எனக்குப் புரியவில்லை.

இவ்வளவு நாட்களும் நானும் தாமோ மாமா கூறியது போல் its just social drinking என்று தான் நினைத்தேன். தாமோ மாமாவின் கதையை கேட்கும் பொழுதெல்லாம் நான் அவரை நினைத்து பிரமித்ததுண்டு. ஒரு முன்னோடியாகவே கருதியுள்ளேன். ஆனாலும் தற்கால வாழ்க்கை முறையில் குடிப்பது ஒன்றும் தவறான விடயம் அல்லவே என்றே நினைத்துள்ளேன். அலுவலகத்தில் என் நண்பர்கள் குடிப்பதையும், ஏன் என் பெண் தோழிகள் அதனை சுவைப்பதனையும் கூட கண்டுள்ளேன். தவறாக தோன்றியதில்லை. ஆனால் அதையே தாமோ மாமா கூறுகையில் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. தவறாக தோன்றுகின்றது. எதனால்? தாமோ மாமாவைப் பற்றி என் மனதில் இருந்த பிம்பம் அழிந்ததனாலா… புரியவில்லை.

அதோ ஒரு அழகான குடும்பம். கணவன், மனைவி, அவர்களின் மூன்று வயது மகன். கணவன் குடித்துக்கொண்டிருக்கிறார். அவர்களின் மகன் அதனைக் கேட்டு அடம் பிடிக்கின்றான். கணவனும் மகனுக்கு துளியளவு கொடுக்கின்றார். "ஐயோ அவன் சின்ன பையன். அவனுக்கு கொடுக்கிறிங்களே" என முதலில் பதறினாலும், "கொஞ்சம் தான் கொடுத்தேன். ஒன்றும் ஆகாது" என்று கணவன் கூறியதைக் கேட்டு சாமாதானமாகி, தன் மகன் குடிப்பதை பார்த்து ரசிக்கும் மனைவி.

நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம்? நாகரீகம் என்ற பெயரில் நம் சந்ததியினருக்கு எவ்வாறு தவறு செய்வது என்று சொல்லிக் கொடுக்கின்றோமோ? என் நண்பனின் மகளின் முதலாவது பிறந்த நாள் விழாவில் மது வழங்கப்பட்டது. அதுவும் அதற்கான ஏற்பாடுகளை நானே செய்தேன். அப்பொழுது தோன்றாத குற்றவுணர்வு என் மனதில் இப்பொழுது எழுகிறது. தாமோ மாமாவின் கூற்றினை கேட்டபின் எழுகிறது.

மனர்ஸ், ஸ்டேடஸ், சோசியல் டிரிங்கிங் என்ற பெயரில் அடுத்த சந்ததியினருக்கு தவறான வழிகாட்டியாக இருக்கின்றோமோ என்று தோன்றுகிறது என் மனதில் ஒரு நெருடல்.

## அத்தனைக்கும் ஆசைப்படு..



-மாதுமை பார்த்தீபன்-

மனிதன் லௌகீகத்தில் சஞ்சாரம் செய்ய ஆரம்பித்ததிலிருந்து பிறப்போடு சேர்ந்து நகமும் சதையுமாகப் பின்னிப் பிணைந்ததே ஆசையும் மோகமும். "அத்தனைக்கும் ஆசைப்படு" என்றார் சற்குரு ஜக்கி வாசுதேவ். 'கனவு காணுங்கள்' என்றார் மறைந்த தலைவர் அப்துல்கலாம். இது எல்லாம் சொல்லிவைத்த பெரியோர்கள் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்று ஆசை வெள்ளத்தை அணை போட்டுத் தடுக்கவும் செய்தார்கள். நாணயத்திற்கு இரு பக்கங்கள்தான். ஆனால் இந்த ஆசையின் பரிணாமங்களோ பன்முகம் காட்டியே நிற்கின்றன. ஆக, மொத்தத்தில் மனித வாழ்க்கையின் ஆணி வேராகவும், சமூகத்தின் உயிர் நாடியாகவும் இந்த ஆசை திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

ஒரு தாய்மையின் கனவுகள் குழந்தை கருவுற முன்னிருந்தே ஆரம்பிக்கிறது. பூமியையே பாரா அந்தச் சேய் மீது தாய் காணும் கனவுகள்தான் கொள்ளை. என் பிள்ளை என்னைப்போல சமூகத்தில் உயர்ந்து நிற்க வேண்டும், ஒரு வைத்தியராகி என்னைச் சமூகத்தில் கௌரவிக்க வேண்டுமென முலைப்பாலூட்ட முன்னரே மனப்பால் குடியாத அன்னையரில்லை. அந்த ஆசைகளும் கனவுகளும் குழந்தை வளர்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் போய்விடுமா என்ன? பால் மணம் மாறாக் குழந்தையின் சிரிப்பும் சிருங்கார நளினமும் கல் மனதையும் கரைக்கத்தான் செய்கிறது. சேயதுபால் தாய் கொள்ளும் அன்பும் அரவணைப்பும், ஏன் கண்டிப்பும் கூட தாயன்புதான்.

பன்றி கூட குட்டியில் அழகாய்த் தெரியும் என்பார்கள். பயமறியா இளங்கன்றுகள் மீதும் வாலாட்டிவரும் நாய்க்குட்டி மீதும் செல்லக்கதை பேசும் பச்சைக் கிளி பேச்சிலும் உள்ளம் கொள்ளை போகிறது. அவைகள் பால் இனம் புரியாத அன்பு உருவாகிறது. இதுவே ஜீவ காருண்யமாகும். பௌத்தம் சொன்ன கௌதம புத்தரும், சிபிச்சக்கரவர்த்தியும் ஜீவ காருண்யத்தை உலகறிய உணர்த்தியவர்கள். "உன்னைப்போல் உன் அயலவர்களையும் நேசி" என்கிறது கிறிஸ்தவம். "அன்புதான் இன்ப ஊற்று" என்றார்கள்.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்,
ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்"

என்றார் முப்பானூலார்.

தன்னலமற்ற ஆசைதான் அன்பு. அது ஆழமறியாது, மற்றும் பேதமறியாது. அன்பும் பண்பும் கொட்டி வளர்க்கப்படும் குழந்தை வழிமாறிப் போவதுமில்லை. வம்புச் சண்டை தேடி வருவதுமில்லை.

அன்பும் ஆசையும் நீந்தும் குளத்தில் ஒரு புதிய தாமரை அரும்புகிறது என்றால் அது காதலன்றி வேறென்ன? கண்டதும் காதல், காதலுக்கு கண்ணில்லை என எள்ளி நகையாட ஓரணி இருந்தாலும், அழியாத காதல் காவியங்களை பாடநூலில் சேர்த்து வளரும் சந்ததிக்கு அதன் புனிதத்தை எடுத்துரைக்கவும் தவறவில்லை. பருவக் கோளாறினால் பாழாகிப் போகிறாள் எனப் பரிகசித்தாலும், இரு மனம் சேர்ந்தால் போதுமே திருமணத்துக்கு என்று காதலுக்கு பச்சைக் கொடி காட்டவும் செய்கிறனரே. சிவ சக்தி அந்தஸ்தை திருமண மேடையிலே உரைக்கும் இந்து மதம், நீயின்றி நானில்லை, நானும் நீயும் இனி வேறில்லை என அர்த்த நாரீஸ்வரராய் உரைக்கிறது கணவன் மனைவி பந்தத்தை, இருமனம் கொண்ட காதலை.

"திக்கற்றவனுக்கு தெய்வமே துணை". "என்னால் முடியாதது எதுவுமல்ல" என மார்தட்டிக்கொள்ளும் பலர், ஆடி ஓய்ந்து ஆதரவற்றபின் அவனின்றி அணுவுமசையாது என உணரத்தான் செய்கிறனர்.

*"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி*
*ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது*
*வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே"*

– திருஞான சம்பந்தர்

குழப்பத்தின் பின்னரே தெளிவு, குற்றங்களால் வருந்தும் மனித மனம் அதிலிருந்து விடுபட நாதன் அவன் நாமம் உச்சரித்து தனது கர்ம வினைகளிலிருந்து விடுபட முயல்கிறது. "நெஞ்சுக்கு நிம்மதி அதுவே ஆண்டவன் சந்நிதி" என்றார் கவியரசு கண்ணதாசன். ஆக, குழந்தை மீது கொண்டது தாயன்பு, குமரன் மீது கொண்டது காதலும் இறைவன் மீது கொண்ட காதல் பக்தியன்றி வேறென்ன?

என் உதிரத்தில் உதித்த சகோதரன் மீது கொண்ட சகோதர உணர்வின் தாய் தந்தை திருமண பந்தத்தால் வந்த சொந்த சொந்தங்கள் மீதான பற்றும் அறிமுகமின்றி வந்து ஆருயிராய்க் கலந்த நண்பன் கொண்ட நட்பும் ஆசையென்ற தாயீன்ற பிள்ளைகளே!

"அன்பு குறைந்தால் குற்றம் அதிகரிக்கிறது அன்பு அதிகமானால் அதுவும் குற்றமாகி விடுகிறது. விரும்பியவர்கள் விரும்பாமல் போவதும் விலகி நிற்பதும் அன்பு அதிகமாவதன்றி வேறென்ன?"

அன்பும் மற்றும் அரவணைப்பென்றால் என்னவென்று சிறு வயது முதல் கண்டிராத பிள்ளை பண்பற்று சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறது. மனித மனம் குரங்கென்றால் அதை ஆட்டி வைக்கும் சாவி ஆசையென்றால் மறுப்பீர்களா? பற்றற்ற நிலையிலே பரம ஞானத்தை உணர முடியும் என்றார்கள். இதைச் சொன்ன இந்து மதம் தான் இல்லறத்தின் பின்னரே துறவறத்தை வலியுறுத்துகின்றது. பல சாதனைகளின் பின்னர் ஓய்ந்து போகிறது. மனித மனம் எங்கே அதை நடத்த முடியவில்லையோ, தன் எதிர்பார்புக்கள் அனைத்தும் ஏமாற்றத்தை தருகின்றதோ, அங்கே ஆசை அசுர வேடம் பூண்டு சங்காரம் செய்யத் துணிகிறது.இது தன்னை மட்டுமன்றி பிறரையும் வேரறுக்க வல்லது.

பணமென்றால் பிணமும் வாய் திறக்குமாம்! மனிதன் விதிவிலக்கா என்ன? அளவுக்கு மீறிய பணத்தை குறுகிய காலத்தில் சம்பாதிக்க குறுக்கு வழியில் சிந்திக்கிறது. மண்மீது கொண்ட மண்ணாசை; மாற்றான் பெண் மீது கொண்ட காமம், பெண்ணாசை, பதவி, புகழ், போலி கௌரவம் மீது கொண்ட பேரவா பேராசையுமன்றி வேறென்ன? புராணங்களும் இதிகாசங்களும் பல போதனைகளை சொல்லி வைத்தாலும் அனுபவத்தால் உணர்ந்தாலன்றி அதை ஏற்க மறுக்கிறது மனித மனம். கோபம், குரோதம், விரோதம் என்பன ஆசையெனும் அம்பு எய்த வில்லுகளே. எது சரி எது பிழை என்ற நிதானத்தை ஆட்டிப்பார்க்கிறது. ஆசை ஆயுதம். நிலையில்லா பொருட்கள் மீது கொள்ளும் நிகரற்ற ஆசை மனிதனை மனிதனாய் வாழ அனுமதிப்பதில்லை.

ஆக, அத்தனைக்கும் அளவாக ஆசைப்படத்தான் மதங்களும் சரி, மனிதரில் மாணிக்கரான பெரியோர்களும் கூறி வைத்தார்கள். அளவான ஆசை ஆக்கத்தையும் அதுவே அளவை மீறும்போது அழிவுக்கும் வித்திடுகிறது.

தன்னை அறிந்தவன் ஆசைப்பட மாட்டான்!

உலகை அறிந்தவன் கோபப்பட மாட்டான்!

இந்த இரண்டையும் உணர்ந்தவன் துன்பப்பட மாட்டான்! – பகவத்கீதை –

# பறவைகள் ஒலி


காகம் கா--கா

கிளி கி--கீ

குயில் கு--கூ

கோழி கொக்--கொக்

ம. அட்சரன்
வயது 4







## பெண்மையின் மறுபக்கம்- பெண்ணாக ஒரு பார்வை



-சியாமளா யோகேஸ்வரன்-

பெண்ணென்ற பிறப்பெடுக்க பெருந்தவம் செய்திருக்க வேண்டும் என்ற முதுமொழிதனைப் பல தடவைகள் கேட்டுவிட்ட பொழுதிலும், கடந்து செல்லும் பாதையிலே காலடிகள் தடக்கி விட, காலமுடன், ஆண்குலமும் சேர்ந்து நகைக்கும் சந்தர்ப்பந்தனிலே பெண்ணாகப் பிறந்து விட்டதற்காய் வாழ்வில் ஒரு முறையாவது வருத்தப்படாத பெண்களே இல்லையென்று சொல்லிவிடலாம். பெண்ணென்ற பிறப்பு அத்தனை தூரம் பாவம் செய்துவிட்டதா என்று சிந்தித்துப் பார்த்தால் உண்மையில் பெண்ணாகப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும் என்ற பேருண்மை நிசர்சனமாய் எம்முன் எழுந்து நிற்கும்.

பெண்மையின் மென்மையையும் அதன் பெருமையையும் புரிந்து கொண்டு போற்றக் கூடிய தந்தையும், சகோதரர்களும், கணவனும், குழந்தைகளும், மற்றும் நண்பர்களுமே அமைந்து விட்டால் அதை விட சொர்க்கமும் செல்வமும் பெண்ணுக்கு வேறெதுவும் வேண்டுமா? பெண் குழந்தை பிறந்து விட்டாலே பெரிய பொறுப்பொன்று வந்து விட்டதாகக் கருதி அதை கொஞ்சம் சுமையாகவே எடுத்துக் கொண்டு கட்டுப்பாடுகளைக் கூட்டி அவளைக் கட்டி வைத்து வளர்க்கும் பெற்றோரைப் பார்த்து வளரும் ஆண்மகன் அதே மன நிலையுடனும், அதே கண்ணோட்டத்துடனும் தான் தன் மனைவியையும் தன் குழந்தைகளையும் பார்க்கத் தொடங்குகிறான்.

பெண்ணென்பவளை ஒரு போகப் பொருளாக மட்டுமே பார்க்கக் கற்றுக் கொடுக்கும் சமுதாயத்தினால் ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியாது என்பது வெளிப்படையான உண்மை. ஆண்டவன் படைப்பினிலே, பெண்ணின் உடற்கூறுகளும், உடல் அமைப்புகளும் பெண்மையின் தாய்மையழகை அதிகமாக்கிக் காட்ட, அதே பெண்ணுக்குச் சிலமனிதர் கொடுக்கும் சில்லறைப் பெயர் கவர்ச்சிப் பொம்மை என்பதுதான்.

ஆணுக்கு இல்லாத வாய்ப்பாகத், தாய்மையைத் தாங்கும் வலிமையும், திறமையும் பெண்ணுக்கு மட்டுமே என்று அந்த ஆண்டவன் கூடக்கணக்குப் போட்டே பெண்மையைப் படைத்திருக்கிறான்.

வலிகளைப் பொறுத்துக் கொண்டு, துன்பம் உச்சந்தலையைப் போட்டு அழுத்தும் நேரத்திலும் அதை துணிவாக எதிர் நோக்கும் அசாத்திய வல்லமையைக் காட்ட வல்ல பெண்களின் பெருமைகளை வரலாற்றில் மட்டுமல்ல நடைமுறையிலும் கண் கூடாகக் காண்கின்றோம்.

தாயாக, தாரமாக, சோதரியாக, அன்பு மகளாக தானெடுக்கும் அத்தனை அவதாரத்தையும் சரியாக செய்து முடிப்பவள் பெண் என்பதை பெண்மையை மதிக்கும் எவருமே ஒத்துக்கொள்வர். மனைவி இறந்து விட்டால் சில காலங்களில் புது மாப்பிள்ளையாகி விடும் ஆண்களிடையே கணவனின் நினைவோடு, அவன் கனவுகளைத் தாங்கி முள் மீது நடக்கும் வலி பொறுத்து குழந்தைகளை வளர்த்தெடுக்கும் எத்தனை பெண்களைப் பார்த்திருக்கிறோம். அன்பான ஆதரவான குடும்பத்தில் குதூகலமாக வாழும் பெண்களால் தான் வெற்றிப் பாதையில் வீறுநடை போட முடியும் என்பதும் சத்தியமான வார்த்தை. ஆனால் எத்தனை ஆண்களால் தம் மனைவியைப் புரிந்து கொள்ள முடிகிறது என்பது இங்கே ஒரு பெரும் கேள்வியாகிறது.

பொறுமையாக, அன்பாக, ஆதரவாகக் குடும்பத்தை அழகுற நடத்த ஒரு உயிரைப் படைத்த இறைவன் அதற்கு தலைக்கனம் வந்து ஆடக்கூடாது என்பதற்காகவே சில குறைகளையும் சேர்த்தே படைத்திருக்கிறான் என்ற சூட்சுமத்தைப் புரிந்து கொண்ட ஆணுக்கு இந்த வாழ்வின் வசந்தமே காலடியில் தான். வீட்டில் இருக்கும் பெண்ணென்றாலும் சரி, வேலைக்குப் போகும் பெண்ணென்றாலும் சரி அவளின் தலையில் ஆயிரம் சுமைகள். அடுத்த நேர சாப்பாடு முதல், குழந்தைகளின் வகுப்புகள், படிப்புகள், தேவைகள் என்று அத்தனையும் அவள் தலைமீது ஏறி நின்று உலுப்பிக் கொண்டிருக்கும். அத்தனையையும் சரியாகச் செய்து முடிக்க வேண்டுமே என்ற பதட்டத்தில் அன்பான தேவதை அவ்வப்போது தலை விரித்தாடும் காளியாகவே மாறி விடுகின்றாள். இதுவே ஒரு ஆணை எடுத்துக் கொண்டால் மிகச் சுலபமாக அதை செய்து விட்டுப் போய் விடுவான் அல்லது அதை சுலபமாக மறந்து விட்டு காரணமொன்றைக் கை காட்டி விட்டுச் சென்று விடுவான். எடுத்த பொறுப்பை செவ்வனே முடிக்கும் வரை போராட்டக் குணத்துடன், பின் நோக்கியும் சிந்தித்துச் செயற்படும் திறன் பெண்ணுக்கு மட்டுமே கிடைத்த ஒரு பெரும் வரம். ஆனால் பெண்கள் ஒரு சின்ன விடயத்துக்குமே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது மட்டுமல்ல அதைச் சொல்லிக் காட்டி விட்டால் பெருங்கோபம் கொள்கிறார்கள் என்பதும் உண்மைதான். அவர்களின் போக்கிலேயே

விட்டுவிட்டு அதை செய்து முடித்ததைப் பாராட்டி விட்டுப் போகும் ஆண்கள் வாழக் கற்றுக் கொண்டவர்கள்.

எளிதில் உணர்ச்சி வசப்படும் பெண்களின் குணத்தினாலும் அதீதமாகக் கற்பனை செய்து கொள்ளும் குணத்தினாலும், ஆணென்ற பாதுகாப்புக் கவசத்தில் வாழ்ந்து பழகி விட்ட பெண்களின் குணத்தினாலும் தான் பாதி நேரங்களில் தம்பதியினரிடையே மனக்கசப்பு ஏற்படுகிறது. உதாரணமாக, வேலைக்குப் போகும் ஆண் வரச் சற்றுத் தாமதமானாலோ அல்லது கடைக்குச் சென்று விட்டுத் திரும்பச் சற்று நேரமானாலோ மனைவியின் அழைப்பு கைத்தொலைபேசியில் வந்து விடும். அதைக் கண்ட மாத்திரத்தில் கணவனின் கோபம் ஏறத் தொடங்க "எங்கே நிற்கிறீர்கள்" என்ற பழக்கப்பட்ட அதே கேள்வி அந்தக் கோபத்திற்கு எண்ணெய் ஊற்றி விடுகிறது. ஏதாவது நடந்திருக்குமோ என்ற அதீதக் கற்பனையின் பயவடிவம் அல்லது என்னைக் காணும் ஆவல் என்று அதைச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டால் அங்கே காதல் வந்து காலூன்றிக் கொள்ளாதா?

பிறந்த நாள், திருமண நாள் என்று அத்தனையையும் சுலபமாக மறந்து விட்டு, அதை மறக்க விட்டு பின் சொல்லிக் காட்டும் பெண்களின் குணம் புரிந்து கொண்ட பின்னும் மீண்டும், மீண்டும் ஏன் அந்தத் தவறைத் தொடர்ந்து செய்கிறார்கள் ஆண்கள் என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடியவில்லை. நமது அன்பான கணவன் நான் பிறந்த தினத்தை, நாம் இணைந்த தினத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளும் அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை– அப்படியாயின் நாமொன்றும் அவர்கள் வாழ்வில் முக்கியமானவர்கள் கிடையாது என்று பெண்கள் நினைப்பதால்தான் அதனைப் பூதாகரமாக்கிப் பிரச்சனையாக்குகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு விட்டால் பின்பு மறக்கத்தான் தோன்றுமா? மாறாக ஒரு சிறு அன்பளிப்பை ஞாபகமாகக் கொடுப்பதன் மூலம் அவளின் அந்த அன்பைக் கட்டிப் போடும் வித்தையை இலகுவாக தெரிந்து கொள்ள முடியுமே?

புலம் பெயர் நாடுகளைப் பார்க்கும் போது ஆணுக்கு இணையாகப் பெண்கள் வேலை செய்வதைப் பார்க்கும் போது பெருமை வந்தாலும், தம் குலப்பெண்களைப் பெரிய பாரத்தைக் கூடத் தூக்க விடாமல் பார்த்துக் கொண்டு பெண்மையின் மென்மையைப் போற்றும் எங்கள் இன ஆண்களால்தான் பெண்கள் ஒரு பாதுகாப்பான வேலியை உணர்கிறார்கள் என்றால் அது சற்றும் மிகையில்லை. வாழும் சூழலுக்கேற்ப இயைந்து கொடுத்து கால், விரல், தலை,

முகம் என்று அத்தனையையும் அழகுபடுத்த மனம் பூராவும் ஆவலிருந்தாலும், குழந்தைகளினதும், கணவனினதும் தேவைகள் மட்டுமே மனம் பூராவும் நிறைந்திருக்க, அதை நிறைவேற்றுகையில் வருகின்ற மனத் திருப்திக்கு முன்னால் மற்றதெல்லாம் தூசி என்று நினைத்து வாழும் பெண்மையின் தியாகத்தை அந்தக் குழந்தைகளும், கணவனும் புரிந்து கொண்டு விட்டார்கள் என்றால் அதை விடப் பெண்ணுக்கு வேறு சொர்க்கம் தேவையா? அவள் தனது கடமையைத் தானே செய்கிறாள் என்று பெண்ணின் உழைப்பிற்கு ஆண் வேறு நாமம் சூட்டி, அதை எதிர்பார்ப்பாக மாற்றிக் கொள்ளும் போது தான் பெண்மையின் மென்மையில் உராய்வுகள் தோன்றி வாழ்வில் விரிசல்கள் தோன்றக் காரணமாகி விடுகின்றன.

ஆண்களின் அன்பில், அவர்கள் தரும் கவசத்தினுள் பாதுகாப்பாக வாழப் பழகி விட்டவர்கள் நம் தமிழ்ப்பெண்கள். அதைச் சரியாகப் புரிந்து கொண்டு அன்பையும், ஆதரவையும், பாதுகாப்புக்கவசத்தையும் ஆண் வழங்கும் போது அங்கு இயற்கை கூட முரண்படாமல் போக, பெண்மையின் மென்மையும் ஒளி வீசுகிறது. தொழினுட்பம் முன்னேறி, நாகரிகம் முன்னேறி ஆணுக்குப் பெண்ணால் நிகராக வெற்றிநடை போட முடியும் என்ற நிரூபித்து விட்ட இந்தக் காலத்தில் பெண்களால் முடியாதது என்று எதுவுமில்லை என்று நிருபணமாகி விட்டபோதிலும், இந்த நூற்றாண்டிலும் பெண்மையின் தேவையையும், அதன் அருமையையும் புரிந்து கொண்டு அனுசரணையாக வாழும் ஆண்கள் வாழும் வரை இறைவனின் படைப்பின் வேறுபாட்டிற்கும் ஒரு மகத்தான வெற்றி தான்.

மூத்த பிரஜைகளின் நலன் பேணுமுகமாக, கேசி தமிழ் மன்றத்தினால் நடாத்தப் படுகின்ற மூத்த பிரஜைகள் ஒன்றுகூடல், ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமை முற்பகல் 10:00 தொடக்கம் மதியம் 2:00 மணிவரை, 112 High Street, Berwick, VIC 3806 எனும் முகவரியில் அமைந்துள்ள "Berwick Senior Citizens Hall" இல் நடைபெறுகின்றது. மேலதிக விபரங்கள் கேசி தமிழ் மன்ற இணையத்தளத்தில் www.caseytamilmanram.org.au பார்வையிடலாம்.

## டாலர் சொல்லும் கதை



-சங்கரி அப்பன்-

ஸ்பிரிங் சீசன் வந்துவிட்டிருந்தது. கலர் கலரான பூக்களால் வீட்டுத் தோட்டங்கள் உயிர் பெற்று மலர்ச்சியாக இருந்தது. எந்தப் பூவிலும் வாசமில்லை. இந்த நாட்டில் அப்படித்தான். பொன்னிற கிராப்பு முடி உள்ள இந்த நாட்டுப் பெண்கள் எங்கே பூ வைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்று அனுமானித்து இயற்கையே பூக்களுக்கு வெறும் வர்ணங்கள் போதும் என்று முடிவு பண்ணிவிட்டதாக வத்சலா நினைத்தாள். நாலு வயது மகளை லேக் சைட் ப்ரைமரி பள்ளியில் விட்டுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் அவள் கணவன் மனோ கேட்டான் –

"வத்சு... அவசரமா பணம் தேவை. அந்த ஐயாயிரம் டாலரை எடுத்துக்கவா? ஏ.டி.எம்

போக நேரமில்லை..."

"நோ...நோ...நோ..."என்று கத்திவிட்டாள் வத்சலா.

"கத்தாதே..."என்றுவிட்டுப் போனான் அவன்.

பீரோவிலிருந்து டாலர்களை எடுத்துத் தடவிப் பார்த்தாள் வத்சலா. கண்களில் நீர் முட்டி நின்றது. இது சவானா கொடுத்தது. அவள் இப்போ எங்கிருக்கின்றாளோ? ஆனால் அவள் நினைவுகள் இவள் மனதில் தங்கிவிட்டது. கடந்த எட்டு வருடமாக இந்த ஐயாயிரம் டாலர்களை பத்திரமாக வைத்திருக்கின்றாள். வத்சலாவின் மனம் பின்னோக்கிச் சென்றது.

அப்போது வத்சலா இருபது வயது மங்கை. மெல்போர்ன் பல்கலைகழகத்தில் எம்.எஸ். படித்துக் கொண்டிருந்த மாணவி. "என் அப்பார்ட்மெண்டை என்னுடன் ஷேர் பண்ணிக்கொண்டிருந்த வித்யா மாதவன் வேலை கிடைத்துப் போய்விட்டாள். இப்போ முழு வாடகையும் நானே கட்ட வேண்டியிருக்கு வேறு யாராவது மாணவி என் கூட ஷேர் பண்ண கிடைப்பார்களா?" இப்படி எல்லோரிடமும் செல்லி வைத்திருந்தாள் வத்சலா. இதுவரை யாரும் கிடைக்கவில்லை. அவள் படிப்பிற்கான ஃபீஸ் அம்மா கட்டுகிறாள். வெளிநாட்டில் பிள்ளைகளை படிக்க வைப்பது சாதாரண விஷயமல்லவே. "சாரதா... உனக்கு ஏன் இந்த வீண் வேலை? ஒரே பெண். அதுவும் தகப்பன் இல்லாத பெண். உனக்குத் துணையாக இங்கேயே வைத்து வேணும்கற அளவு படிக்க வைத்து கல்யாணம் பண்ணிக் கொடுக்கக் கூடாதா?" என்று உறவினர்கள் அவள் அம்மாவிற்கு மாறி மாறி எடுத்துச் சொன்னார்கள். எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை சாரதா. தன் சக்திக்கு மீறி, அவள் ஆசைப்பட்டாள் என்ற ஒரே

காரணத்திற்காக கடன்பட்டு வெளிநாடு அனுப்பி வைத்தாள். சாப்பாட்டுச் செலவிற்கும் தங்கும் இடத்திற்கான வாடகைக்குப் வத்சலா பார்ட் டைம் ஜாப் பார்த்து சமாளித்து வருகிறாள். இப்பொழுது முழு வாடகையும் அவள்தான் கட்ட வேண்டும் என்கிற நெருக்கடி. கவலையுடன் லேக்கைச் சுற்றி அதிகாலையில் வாகிங் சென்று கொண்டிருந்தாள் வத்சலா. காற்றால் சீண்டப்பட்டு நெளிந்து நெளிந்து ஓடிக் கொண்டிருந்த நீரை வேடிக்கை பார்த்தபடி நடந்தாள். பொன்னிற முடியும் நல்ல உயரமும் கொண்ட பதினெட்டு வயது வனப்புடன் ஒரு வெள்ளைக்காரப் பெண் எதையோ உற்றுப் பார்ப்பதைப் பார்த்தாள். "வாட்ஸ் ராங்?'' "ஸூ..." அப் பெண் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தாள். சீராக வெட்டப்பட்ட புல் வெளியில் ஒரு சின்ன மாக்பை பறவை அசையாமல் இருந்த்து. அடிபட்டிருக்குமோ?.

"இட்ஸ் நாட் மூவ்ஸ். இட்ஸ் ஹாட்" என்றாள் அப் பெண். அவள் நீலக் கண்களில் கவலையும் கண்ணீரும். நான்காவது ரவுண்ட் சுற்றி விட்டு அதே இடத்திற்கு வத்சலா வந்த போது அழகான அப் பெண், அந்தப் பறவையை கையிலெடுத்து தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். மெல்ல சிறகு விரித்து அது பறந்து போயிற்று. "ஹவ் நைஸ்" என்று மகிழ்ச்சியடைந்தாள். அவள் மேல் விரிவாக ஒரு நெகிழ்வு ஏற்படுவதை வத்சலா உணர்ந்தாள். எவ்வளவு மென்மையான மனசுடையவள்! அவள்தான் சவானா. மெக்டொனால்ட்ஸில் வேலை பார்ப்பதாகவும் தங்க இடம் தேடுவதாகவும் சொன்னாள். அப்படியே அவளை அள்ளிக் கொண்டு வந்தாள் வத்சலா. அப்பாடா வாடகை ஷேர் பண்ண சம்மதித்தாள். பார்த்தால் நல்ல பெண்ணாகப் பட்டது. ஆனால் வேலியில் போகும் ஓணானை காதில் விட்டுக்கொண்ட அவலமாக அது மாறிற்று.

சவானா அடிக்கடி குடித்துவிட்டு வந்தாள். கூடவே ஒரு பாய் ஃபிரண்ட். அநியாயத்திற்கு கொட்டமடித்தார்கள். அந்தப் பையன் போன பின் மறுநாள் "வத்சாலா...ஐ ஹோப் யூ டோன்ட் மைன்ட்" என்று ரோஸ் உதடு பிரித்து பல் வரிசையை காட்டி சிரிப்பாள். வத்சலா சக இந்திய மாணவிகளிடம் புலம்புவாள். "வத்சு... அவளை முதலில் துரத்து. இன்னொரு பாட் டைம் ஜாப் எடுத்துக்க. இவளுக சரிப்பட்டு வர மாட்டாளுக. அவங்க கலாசாரம் அப்படி. தண்ணியடிப்பது, சிகரெட்...செக்ஸ் இதெல்லாம் அவர்களுக்கு சகஜம்" என்று திவ்யா கோபப்பட்டாள். வத்சலா கண்ணீர் வடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டாள். சரி பார்ப்போம் என்று பொறுமை காத்தாள். நாசுக்காக எதிர்ப்பு தெரிவித்தாள். பலமுறை இதுவே வாடிக்கையாகிவிட, ஒரு நாள் கோபம் தலைக்கேற்ற சவானாவை திட்டித் தீர்த்தாள். "மை லாஸ்ட் வார்னிங் சவானா. நோ டிரிங்க்ஸ். நோ ஸ்மோக்கிங், நோ பாய்ஸ், காட் இட்.." குட்டி ஷார்ட்ஸ்ஸூம் தோள்கள் முழுக்க திறந்தபடி இருக்கும் உடலைக் கவ்விய வினோத நீலக் கலர் மேலுடையும் அணிந்திருந்த சவானா மிக

அழகாக இருந்தாள். ஆனால் அவள் நடவடிக்கை அழகாக இல்லையே! கொஞ்ச நாள் அமைதியாகப் போயிற்று. பின் திரும்பியும் ஆரம்பித்துவிட்டாள். "மரியாதையா போயிடு..." என்ற வத்சலா கத்தினாள். சவானா அவள் கைபிடித்துக் கெஞ்சினாள்.

"ஸூ... டோண்ட் சென்ட் மீ அவே. நான் சம்பாதிக்கும் பணம் பத்தலை. என் செலவிற்கு பணம் தருகிறான். அதான்..."

"பணம் கொடுத்தா யார் கூட வேணா உல்லாசமா இருப்பியா?"

''இல்லில்லே ஜேம்ஸ், விக்டர் எல்லாம் கெட்டவங்க. இந் ஜான் ரொம்ப நல்லவன். அவன் என்னை நேசிக்கிறான்.''

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்."

"அவன் என்னைவிட ஒரு வயசு சின்னவன். கல்யாணமெல்லாம் இப்போ பண்ண முடியாது. ஜஸ்ட் வீ ஆர்ஹோவிங் ஃபன்..."

அதிர்ந்து பார்த்தாள் வத்சலா.

"சவானா, திஸ் இஸ் நாட் ஃபன். திஸ் இஸ் ஷேம்ஃபுல். படிப்பை தொடரு. நல்ல வேலையை தேடிக்க. உன் சோம்பேறித்தனத்தால், முட்டாள்தனத்தால் உன் பெண்மையை இழக்காதே. எவ்வளவு நாள் உன்னால் இப்படி காலம் தள்ள முடியும்? நீ கூட்டி வரும் பசங்களே உன்னை மரியாதையாக நடத்த மாட்டார்கள்."

"வத்சாலா, உன் அம்மா உனக்குப் பாதுகாப்பாக உன்னைத் தாங்கி வச்சிருக்காங்க. அப்பா இல்லாத குறை தெரியாம வளர்க்கிறாங்க. ஆனால் பாதுகாப்பு தரவேண்டிய என் பெற்றோர் பிரிந்து போய்வேறு வேறு கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னை ஃபாஸ்டர் ஹோமில் சேர்த்திட்டாங்க. ஸ்டேட் ஃபாஸ்டர் ஹோமில் வளர்வது எவ்வளவு கொடுமைன்னு உனக்குத் தெரியாது. இப்போதைக்கு ஜான் தான் எனக்கு பாதுகாப்பு."

"சவானா, நீ தேடும் பாதுகாப்பும் அன்பும் இந்த ரெண்டுங் கெட்டான் பசங்களிடம் உனக்குக் கிடைக்காது. இப்பொழுதாவது விழித்துக் கொள். படிப்பும் பதவியும்தான் உனக்குப் பாதுகாப்பும் கௌரவமும் தரும். நாங்க எதுக்கு உங்க நாட்டிலே வந்து படிக்கிறோம். ஒரு நல்ல நிலையை அடையத்தான். உன் நலம் உன் கையில. வேர் தேர் இஸ் எ வில் தேர் இஸ் எ வே. புரியுதா? இப்ப நீ வேறு இடம் பார்த்துக்கோ."

சொல்லிவிட்டு வத்சலா சவானாவின் பையை விசிறியடித்தாள். இனி கெஞ்சினாலும் எதுவும் நடக்காது என்று புரிந்து போக, சவானா வெளியேறினாள்.

ரதி என்ற வடநாட்டுப் பெண் சேர்ந்துகொள்ள வத்சலா நிம்மதி பெருமூச்சு விட்டாள். ஆறு மாதங்கள் ஓடிவிட்டது. சவானாவை விரட்டியது, அவள் மனசை ரணப்படுத்திக் கொண்டேயிருந்தது. பாவம் இன்னொசன்ட் கர்ள். எப்படியிருக்கிறாளோ! செமஸ்டர் ஃபீஸ் கட்ட அம்மா ஐயாயிரம் டாலர் அனுப்பியிருந்தாள். பாவம் எவ்வளவு

கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறாள். வேலையில் சேர்ந்தும் அம்மாவை பூப்போல் வைத்துக்கொள்ள வேண்டும். ஃபீஸை கட்டிவிட்டு வீட்டிற்கு வந்தாள் வத்சலா. செல் கூப்பிட்டது. எடுத்தாள்.

"வத்சு..அம்மாவிற்கு ஹார்ட் அட்டாக். பைபாஸ் பண்ணணும்னு டாக்டர் சொல்றார். உன்னால் பணம் அனுப்ப முடியுமா?" அம்மாவின் ஸ்நேகிதி கல்பனா பேசினாள்.

"எவ்வளவு ஆன்ட்டி?"

"ஒரு இரண்டு லட்சம் தேவைப்படலாம்."

"உடனே அனுபுறேன் ஆன்ட்டி" ஃபோனிலேயே அழுதாள்.

"கவலைப்படாதே வத்சு... மருத்துவம் ரொம்ப முன்னேறிவிட்டது. அம்மாவிற்கு நல்லாயிடும்."

"பார்த்துக்கோங்க ஆன்ட்டி..."

மற்ற விபரங்கள் கேட்டுவிட்டு தொடர்பைத் துண்டித்தாள். ஐயாயிரம் டாலர் உடனடியாகத் தேவை. பணத்திற்கு எங்கே போவது? எல்லோரிடமும் கேட்டாள். சிலர் அவகாசம் கேட்டார்கள். சிலர் கையை விரித்தார்கள். அலைந்து திரிந்தும் ஒன்றும் பெயரவில்லை. இன்னும் எங்கு போய் கேட்க? கட்டிலில் உட்கார்ந்து வாய்விட்டு அழுதாள். காலிங் பெல் அடித்தது. திறந்தாள். அங்கு சவானா நின்று கொண்டிருந்தாள்.

"கேள்விப்பட்டேன்... ரதி காலையிலேயே சொல்லிவிட்டாள். என் ஞாபகம் உனக்கு வரவில்லையா வத்ஸாலா? இந்தா..."

என்று அவள் கையில் ஐயாயிரம் டாலர்களை திணித்தாள்.

"நான்தான் அம்மா இல்லாமல் கஷ்டப்பட்டேன். அந்த வலி என்னன்னு எனக்குத் தெரியும். உன் அம்மாவை காப்பாத்த எனக்கு ஆண்டவன் பிரியமாய் கொடுத்த சந்தர்ப்பம் இது. உன் அம்மா உன்னை விட்டுப் போய்விடக் கூடாது. ஜான் கூட இரண்டு மணி நேரம் ஸ்பெண்ட் பண்ணா எனக்கு இந்தப் பணம் கிடைத்துவிடும். ஆனால் நான் அப்படி செய்யலை. ஏன் தெரியுமா? அதை கறை படிந்த பணம் என்று நீ மறுத்துவிட்டால்... அதனாலே..."

சவானா நிறுத்தினாள். வத்சலா இப்பொழுதுதான் கவனித்தாள். சவானா விரல்ல முன்பு மின்னிக் கொண்டிருந்த வைர மோதிரம் இப்பொழுது இல்லை. அது அவள் அம்மாவின் மோதிரம் என்றும் அவள் நினைவாக வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறாள். வத்சலா அவள் வெற்று விரலைப் பார்த்துவிட்டு கண்ணீர் உருண்டோட வேண்டாம் என்று தலையாட்டினாள்.

"டோண்ட் பீ ஸில்லி. இந்த மோதிரம் போனால் வேறு சம்பாதித்து வாங்கலாம். ஆனால் வேறு அம்மா கிடைக்குமா? சேஃவ் யுவர் மம்..."

"நான் உன்னை துரத்தியும் கூட... எனக்காக நீ உன் தாயின் ஒரே ஞாபகார்த்தமான மோதிரத்தை வித்திட்டியே..."

"என் வாழ்க்கையையே வித்திட்டிருந்தேன். மோதிரம் விற்றால் என்ன? ஒரு இலக்கில்லாமல் வீணாகிக் கொண்டிருந்தேன். வாழ வழி காட்டினியே வத்சலா. இப்போ என் கனவு லட்சியம் எல்லாம் நல்லாப் படிச்சு ஒரு நல்ல நிலைமைக்கு வருவதுதான். என்னையே எனக்குப் புரிய வச்ச உனக்கு நான் இது கூட செய்யக் கூடாதா? நான் புதிய சவானா. நோ டிரிங்க்ஸ், நோ ஸ்மோக்கிங். நோ பாய்ஸ். ப்ளீஸ் உடனே பணத்தை அனுப்பு. உன் அம்மா உன்னை விட்டுப் போய்விடக் கூடாது. சரி... நேரமாச்சு. வி-லைன் டிரெயின் பிடிக்கணும். பை..."

இவள் தாங்யூ ஸோ மச் சொல்வதைக் கேட்க அவள் இல்லை. பறந்து விட்டிருந்தாள். செல் கூப்பிட்டது. கல்பனா ஆன்ட்டி.

"ஆன்ட்டி, அம்மா எப்படி இருக்காங்க? இப்பவே பணம் அனுப்றேன்."

"வேண்டாம்மா. அம்மா மெடிக்கல் இன்சுயரன்ஸ் பண்ணியிருக்காங்க. உங்க சித்தி கமலா வந்தவங்க சொன்னாங்க. ஸோ... அது எக்ஸ்பென்ஸை கவர் பண்ணிடும். இது தெரியாம உனக்கு ஃபோன் பண்ணி காப்ரா படுத்திட்டேன். ரிலாக்ஸ்... தைரியமா இரு..."

சித்தியும் பேசினாள். வத்சலா நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

வத்சலாவிற்கு கல்யாணம் நடந்தபோது முதலிரவிலேயே அவள் தன் கணவனிடம் சவானா பற்றி விவரமாக சொன்னாள்.

"ஏய்... ஒரு வருஷமா காதலிச்சோம். அப்ப சொல்லவேயில்லையே" என்று கோபப்பட்டான் மனோ.

"ஸாரி மனோ... பட் தப்பு உங்களோடதுதான். எங்கே சிந்திக்க விட்டீங்க? ரோமான்ஸ் மூடிலேயே இருக்க வச்சு ப்ரையின் வாஷ் பண்ணிட்டீங்க..." இருவரும் சிரித்தார்கள்.

"ஸோ அந்த ஐய்யாயிரம் டாலர்கள் என்னிடமே தங்கிவிட்டது. அவள் ஞாபகார்த்தமாக வச்சிட்டிருக்கேன்."

வத்சலா நிகழ்காலத்திற்கு வந்தாள். ஐயாயிரம் டாலர்களை மீண்டும் பீரோவில் வைத்துப் பூட்டினாள். நட்பூ என்கிற பூ யாருக்கும் யாரிடமும் மலரலாம். அதற்கு ஜாதி, மதம், வேற்று நாடு என்கிற எந்த பேதமும் கிடையாது. சிந்தித்துக்கொண்டே லேப்-டாப்பை திறந்தாள் வத்சலா. மெயில் பார்த்தாள். எட்டு வருடங்களுக்குப் பிறகு சவானா மெயில் அனுப்பியிருந்தாள்.

ஹாய் வத்சலா!

நான் சவானா. டென்டிஸ்ட் ஆகிவிட்டேன். அமெரிக்காவில்

நியூயார்க்கில் இருக்கிறேன். மெரீட் டூ ஸ்டிஃபன். அவரும் டென்டிஸ்ட் எக்ஸ்பெக்டிங் டிவின்ஸ். நீ ஆசைப்பட்டது போல ஆகனும். அப்புறம்தான் உன்னைக் கான்டாக்ட் பண்ணனும்னு இருந்தேன். ஆர் யூ ஹெப்பி? என் அம்மா தன் கணவரோடு வந்து பார்க்கிறாங்க. என் அம்மாவின் அன்பில் நனைகிறேன். கிராண்ட் சில்ரனை ஆவலோடு எதிர்பார்க்கிறாங்க. உனக்கும் கல்யாணம் ஆகிவிட்டிருக்கும்? என்று நினைக்கிறேன். கிராண்ட் சில்ரனோடு உங்கம்மா சந்தோஷமா இருப்பாங்க இல்லையா? கன்வே மை லவ் டூ ஹேர். ரிப்ளை சூ ன்-சவானா

வத்சலாவிற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. பதில் மெயில் அனுப்பியதோடு, ஒரு வைர மோதிரம் பரிசாக ஆன்-லைனிலேயே அனுப்பினாள். அவள் கணவன் உள்ளே நுழைந்தான். அவள் விவரம் சொன்னாள்.

"குட். வத்சலா உன் ஸ்நேகிதி பத்தி நல்ல நியூஸ் சொல்லியிருக்கே. நான் கோவிலுக்குப் போய் உங்கம்மா பேரிலே அர்ச்சனை பண்ணிட்டு வரேன். இந்தா பிரசாதம். அன்று உங்கம்மாவின் பிறந்த நாளல்லவா?"

வத்சலா பிரசாதத்தை வாங்கும்போது அவள் கை நடுங்கிற்று. கண்ணில் நீர் நிரம்பிற்று. எப்படிப்பட்ட பரந்த மனசு இவருக்கு.

"கவலைப்படாதே உன் அம்மா நம்மை ஏற்றுக் கொள்வாங்க. காலப் போக்கில் இதுவும் நடக்கும்"

அவன் போய்விட்டான்.

"சவானா... என் அம்மா என்னை விட்டிட்டுப் போய்டக் கூடாதுன்னு உன் அம்மா மோதிரத்தை வித்து பணம் கொடுத்தே. ஆனா அவங்க விட்டிட்டுப் போயிட்டாங்க. அவங்க உயிர் பிழைச்சிட்டாங்க. பை-பாஸ் பண்ணியதினாலோ என்னவோ அவங்க இதயம் கல்லாயிடுச்சு. இதை எப்படி உன்கிட்டே சொல்வேன்?" மனதோடு நினைத்தாள்.

"வத்சு... நீ இன்னும் கிளம்பலையா? என் கூட சர்ச்சுக்கு வரேன்னு சொன்னியே"

என்றபடி வந்தான் அவள் கணவன் டேவிட் மனோகரன். பைபாஸிலிருந்து தப்பிய அம்மா மதம் என்ற மதயானையின் தாக்குதலிலிருந்து தப்ப முடியாமல் அவளை நிராகரித்து விட்டாள். வெளிநாட்டவர் கலாச்சார தொய்வினில ஒரு காம்பரமைஸ் வரக்கூடும். ஆனால் நம் நாட்டில்... நோ சான்ஸ். மதத்தால் குடும்பங்கள் வதம் ஆகின்றன என்கிற நிஜம் வலிக்கிறது. வத்சலா ஏசுநாதரிடம் வேண்டினாள். "என் அம்மாவை எனக்குத் திருப்பிக் கொடு."






**அத்தியாயம் 8** **சூர்யபுத்திரன்**

முன் கதைச்சுருக்கம்: ஊரிலேயே பெரிய மனிதரும் பணக்காரருமான 72 வயதான முத்துராஜப்பிள்ளையும் அவருடைய இரண்டாவது சன் நடராஜப்பிள்ளையும் அடுத்தடுத்து கொலை செய்யப்படுகிறார்கள். இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தலைமையிலான விசாரணைக்குழுவிற்கு உதவுவதற்காக சிஐடி ஆபீசர் ஆனந்த் எழும்பூருக்கு வருகிறார். சென்னை புதைபொருள் ஆராய்ச்சி மையத்திலிருந்து சில ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக இந்த ஊருக்கு வந்திருப்பதாகக் கூறி முத்துராஜப்பிள்ளையின் பங்களா அவுட் ஹௌசில் தங்குகிறார் ஆனந்த். இனி....

ஆனந்திற்கு தொடர்ந்து தூங்க முடியவில்லை. இப்படியும் அப்படியுமாகப் புரண்டு படுத்தான். கைக்கெட்டிய தூரத்தில் கொலையாளி இருந்து கொண்டு கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருப்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது. கொலையாளியை தொடும் தூரத்திற்கு நெருங்கி விட்டதாக உள்ளேயிருந்து பட்சி சொன்னது.

எழுந்து உட்கார்ந்து சிறிது நேரம் டிவி பார்த்தான். நேரம் ஆறு மணி ஆகிவிட்டிருந்தது. தலைக்கு நன்றாகக் குளித்துவிட்டு ஜீன்சுக்குள் நுழைந்தான். வேணுவை இண்டர்காமில் தொடர்பு கொண்டு காப்பி வரவழைத்தான். பசும்பாலில் காய்ச்சி வேணு கொண்டுவந்து வைத்துவிட்டுப் போன ஆவி பறக்கும் காப்பி மூளையை சுருசுறுப்பாக்கியது.

ஒரு பேனாவும் பேப்பரும் எடுத்து சிறிதாகக் குறிப்புகள் வரைய ஆரம்பித்தான்.

பெரியவர் முத்துராஜப்பிள்ளை கொலை செய்யப்பட்ட போது அவருடைய வாரிசுகள் வேலையாட்கள் எல்லோரும் பங்களாவில் இருந்திருக்கிறார்கள். போலிஸ் விசாரணையில் ஒவ்வொருவரின் வாக்குமூலங்களும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வாக்கிங் போனவரை அதிக நேரமாகக் காணவில்லை என்று தேடிச் சென்றபோது முகத்தை மூடி சுவாசத்தை நிறுத்தி கொலை செய்யப்பட்ட நிலையில் பிணமாகத்தான் தூக்கி வர முடிந்திருக்கிறது. வயதானவர் என்பதால்

கொலையாளிக்கு வேலை சுலபமாக முடிந்துவிட்டது.

இரண்டாமவர் நடராஜபிள்ளை போர்ட் மீட்டிங் முடித்துவிட்டு நேரம் சென்று கம்பெனியில் இருந்து திரும்பியிருக்கிறார். டின்னெர் எல்லோருடனும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு படுக்கைக்கு சென்றவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். இது நடந்த போது சுந்தரமூர்த்தி தவிர்ந்த ஏனையவர்கள் எல்லோரும் ஊரில் இருந்திருக்கிறார்கள். சுந்தரமூர்த்தி அவருடைய தூரத்து உறவினர் ஒருவரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக டெல்லிக்கு சென்றிருக்கிறார். கிடைத்த அடுத்த பிளைட்டில் அவர் வந்து கடைசிக் காரியங்கள் எல்லாம் நடந்து முடிந்திருக்கின்றன.

சுந்தரமூர்த்தியின் மீது ஆனந்திற்கு இருந்த சந்தேகம் இரண்டாவது கொலையின் போது அவர் ஊரில் இல்லாததால் கொஞ்சம் ஆட்டம் காண ஆரம்பித்தது. அதனை பேப்பரில் அடிக்கோடிட்டான். இந்த இரண்டு கொலைகளின் போதும் கைலாசபிள்ளை ஓவர்சீஸ் ட்ரிப் எதுவும் போகாமல் ஊரில் இருந்திருக்கிறார். அவருக்கு ஏற்பட்ட பிசினெஸ் லாஸ் அவர் மீது ஒரு சந்தேகப்புள்ளியை தோற்றுவித்திருந்தது. எதுவும் கையாலாகாத நிலையில் அவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். அல்லது இவர் ஒன்றுமே தெரியாத அப்பாவி என்று வைத்துக் கொண்டால் இந்த சுவிசைட் அட்டெம் மற்றைய கொலைகளுடன் எதுவித தொடர்புகளும் இல்லாத தன்னிச்சையான ஒன்று. கொலையாளி வேறு ஒருவனாக இருக்கும் பட்சத்தில் அவனுடைய லிஸ்டில் கைலாசபிள்ளை இருக்கிறாரா இல்லையா என்பதே ஒரு கேள்விக்குறி.

முதலாவது கொலை வெளியே நடந்திருக்கிறது. இரண்டாவது கொலை பங்களாவின் உள்ளே நடந்திருக்கிறது. கூர்க்கா ராஜுவுக்கு தெரியாமல் யாரோ உள்ளே வந்து தன்னுடைய வேலையை சுலபமாக முடித்துவிட்டு வெளியேறி இருக்க வேண்டும். ராஜுவை அதட்டி விசாரித்ததில் எதுவித உபயோகமான தகவல்களும் பதிவாகியிருக்கவில்லை. பாக்டரியில் வேலை செய்பவர்களை எல்லாம் துருவி விசாரித்து எந்த நிமிடத்தில் எந்த வினாடியில் அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது வரை எல்லாமே தெளிவாக விசாரணையில் பதிவாகியிருக்கிறது. இரண்டு கொலைகளிலும் கொலையாளி எந்தவொரு சிறு தடயமும் விட்டுச் செல்லவில்லை.

பிரகாஷ் கொலை முயற்சியின் போது ஒரு உருவம் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்ததாகவும் அந்த முகமூடி உருவத்தைப் பிடிப்பதற்காக தான் பின் தொடர்ந்ததாகவும் பிரகாஷின் வாக்குமூலம். இது உண்மையான சம்பவமா அல்லது பங்களாவை எப்போதும் ஒரு அலேர்ட்டில் வைத்திருப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றா? எல்லோரையும் எல்லாவிதத்திலும் சந்தேகப்படும்படியான சூழ்நிலையில் இருந்தது ஆனந்தின் மனம்.

இறுதியாக தன்னுடைய அறையை விட்டு அவசரமாக வெளியேறிய உருவம் இளவயதிலிருந்து நடுத்தர வயதுக்குள் இருந்ததாக ஆனந்தின் கணிப்பு. அந்த வட்டத்திற்குள் வேணு, ராஜு, பரந்தாமன் எல்லோரும் வந்து விழுந்தார்கள்.

வேலையாட்கள் என்று பார்க்கும் போது மிக நீண்ட காலமாக பங்களாவில் வேலை செய்பவன் மாரியப்பா. அனைவரினதும் நம்பிக்கைக்குரியவன். வயசாளி, சர்க்கரை வியாதி உள்ளவன். அடிக்கொரு தடவை தோட்டப்பக்கம் ஒதுங்குவான். அவனை சந்தேகவட்டத்திலிருந்து வெளியே வைத்தான் ஆனந்த்.

தான் வரைந்த குறிப்புகளை மடித்து வாலேட்டினுள் செருகினான். லப்டோபை பத்திரமாக படுக்கையின் அடியில் மறைத்துவிட்டு காலை உணவை உண்பதற்காக பங்களாவை நோக்கி நடந்தான் ஆனந்த். முடிந்தால் காவ்யாவின் தரிசனம் கிடைக்கலாம்.

சுந்தரமூர்த்தியும் கலையரசியும் வெளியே கிளம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனந்தைக் கண்டதும் வணக்கம் வைத்தார். ஆனந்தும் பதிலுக்கு வணக்கம் சொன்னான்.

"அண்ணாவைப் பார்க்கனும்னு ராத்திரி முழுக்க புலம்பிட்டே இருந்தா. அதுதான் ஹாஸ்பிடல் வரைக்கும் போய் வரலாம்னு கிளம்பிட்டோம். நீங்க சாப்பிடுங்க. நாங்க வந்து சாப்பிடறோம். எங்காவது வெளியே போகணும்னா பரந்தாமனை கூப்பிடுங்க" சொல்லிவிட்டு டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டார் சுந்தரமூர்த்தி. பதிலுக்கு தலையசைத்து விட்டு உள்ளே சென்றான் ஆனந்த். கலையரசியின் சோகமான முகம் மனதை என்னவோ செய்தது.

டைனிங் ஹாலில் யாருமே இல்லை. வெறிச்சென்றிருந்தது. இவனைக் கண்டதும் வேணு ஓடி வந்தான்.

"உட்காருங்க சார். உப்புமா கிச்சடி பண்ணியிருக்கேன்."

வெள்ளித்தட்டை அவனருகே வைத்தான்.

"சாப்பிடுங்க சார். பெரியம்மாவிற்கும் சின்னம்மாவிற்கும் சாப்பாடு கொடுத்திட்டு வந்திடறேன்".

அவன் குறிப்பிட்டது கனகவல்லியையும் மீனாட்சியையும். அவர்களை ஒரு தடவை மட்டுமே பார்த்திருக்கிறான் ஆனந்த்.

ஆனந்த்துக்கு நல்ல பசி. நன்றாகச் சாப்பிடுவிட்டு வேணுவின் சமையலை ஒரு தடவை சிலாகித்துவிட்டு வெளியே வந்தான். தூரத்தில் பரந்தாமன் நின்றிருந்தான். ஆனந்தைக் கண்டதும் புன்னகைத்தான்.

"டவுன் வரைக்கும் போய் வரணும். என்னை ட்ராப் பண்ண முடியுமா? சாயந்தரமா நானே திரும்பி வந்திடுவேன்."

"இங்கேயே வெயிட் பண்ணுங்க சார். ஒரே நிமிஷத்தில காரோட வந்திடறேன்". சொன்ன மாதிரியே வந்தான்.

அவனுடன் பேசிக்கொண்டே வந்த ஆனந்த் டவுனை அடைந்ததும் ஒரு காப்பி ஷாப் முன்னால் காரை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டான். பரந்தாமன் கை அசைத்து விடை பெற்றுக் காரைத் திருப்பியபோது பரந்தாமனின் கைவிரல்களில் ஏதோ ஒரு வித்தியாசமாக இருப்பதாகப் புலப்பட்டது. என்னவென்று சட்டென்று புரியவில்லை.

பதிலுக்கு கை அசைத்து விட்டு சிறிது நேரம் காத்திருக்க இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனின் வண்டி அருகே வந்து நின்றது.

மஞ்சுவின் கைவண்ணத்தில் மீண்டும் சுவையான நான்வெஜ் உணவை ஒரு பிடி பிடித்துவிட்டு நவநீதகிருஷ்ணனும் ஆனந்தும் மூளையை கசக்கி யோசனையில் ஆழ்ந்திருந்தார்கள். வானம் சாயந்தர நேரத்திற்கு தன்னை தயார் செய்துகொண்டிருக்க நவநீதகிருஷ்ணனின் மொபைல் சிணுங்கியது. ஸ்பீக்கரில் போட்டார். மறுமுனையில் பதற்றமான குரலில் சுந்தரமூர்த்தி.

"சார், நானும் ஓய்பும் காலையிலே ஹாஸ்பிடல் போனோம். கலையரசி அண்ணன் கூட கொஞ்ச நேரம் இருந்திட்டு அப்புறமா வர்றேன்னா. நான் ஆபீஸ் விஷயமா உடனே கிளம்பி வந்திட்டேன். ரெண்டு மணி நேரம் கழிச்சு போன் பண்ணி தன்னை பிக் அப் பண்ண பரந்தாமனை அனுப்பச் சொன்னா. இன்னைக்குன்னு பார்த்து அவங்க அம்மாவுக்கு உடம்புக்கு முடியலைன்னு சொல்லி அவன் வேற சென்னைக்கு கிளம்பி போயிட்டான். டாக்ஸியில வந்திடும்மான்னு சொல்லிட்டு நானும் வேலை விஷயத்தில அத அப்படியே மறந்து போயிட்டேன். அப்புறமா

லஞ்சுக்கு வீட்டுக்குப் போனா அவ இன்னமும் வீடு திரும்பல. ஹாஸ்பிடலுக்கு போன் பண்ணி கேட்டா அப்பவே கிளம்பி போயிட்டான்னு சொல்றாங்க. மொபைல் வேற சுவிட்ச் ஆப் இன்னு வருது. எனக்கு ரொம்ப பயமா இருக்கு சார்".

"தைரியமா இருங்க. அவங்களுக்கு ஒண்ணும் ஆகியிருக்காது. நான் எல்லா செக்அப் போஸ்டையும் அலேர்ட் பண்ணிடறேன். அவங்க உங்கள கடைசியா தொடர்பு கொண்டப்போ என்ன டைம் இருக்கும்?"

"காலையில பத்து நாற்பது இருக்கும். இப்போ அஞ்சு மணித்தியாலம் கடந்திடுச்சு. வந்திடுவா வந்திடுவான்னு பார்த்து மொபைல் வேற சுவிட்ச் ஆப் இன்னு தெரிஞ்சதால பகீர்னு ஆயிடுத்து. ஏதாவது பண்ணுங்க சார் ப்ளீஸ்"

"ஐ வில் பி தேர் ஷோர்ட்லி"

ஆனந்துக்கு சட்டென்று மூளையில் பொறி தட்டியது.

"சார், என்னோட ஊகம் சரின்னா கொலைகாரன் எங்க கைக்கெட்டிய தூரத்தில இருக்கிறான். அவன் இப்போ கலையரசி மேடத்த ஜஸ்ட் கிட்னாப் பண்ணி வைச்சிருக்கான். நாங்க மொதல்ல போக வேண்டியது சிற்பாச்சாரியார் பழனிமலை வீட்டுக்கு"

ஆனந்தை ஆச்சரியமாகப் பார்த்தபடி ஹோண்டா CVR க்கு உயிர் கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

(அடுத்த இதழில் முடியும்)

***இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை***
***அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :***

Casey Tamil Manram
PO Box 2516,
Fountain Gate,
Vic 3805

**மின்னஞ்சல்:** editor@caseytamilmanram.org.au

## நூற்றுக்கு நூறு



( எம். ஜெயராமசர்மா ... மெல்பேண் .. அவுஸ்திரேலியா)

*மாதவத்தார் வள்ளுவனார்*
*வகைவகையாய் குறள்சொல்லி*
*மாநிலத்து மாந்தரெலாம்*
*நூற்றுக்கு நூறுவாழ*
*நுட்பமெலாம் தந்தனரே*
*நூற்றுக்கு நூறுதனை*
*காற்றிலே பறக்கவிட்டால்*
*சாற்றிநின்ற குறளனைத்தும்*
*சகித்திடுமா மானிடரே !*

*புத்தரொடு ராமகிருஷ்ணர்*
*புனிதர்பலர் அவதரித்து*
*சத்தியத்தை போதித்து*
*சன்மார்க்கம் காட்டினரே*
*அவர்சொன்ன அத்தனையும்*
*நூற்றுக்கு நூறெமக்கு*
*ஆற்றல்நிறை மருந்தாக*
*அமைந்ததனை மறந்துவிட்டோம் !*

*காவியங்கள் பலவெமக்கு*
*கருத்தாகப் பலசொல்லி*
*ஓவியமாய் எம்முன்னே*
*உட்கார்ந்து இருக்கிறது*
*நாமதனைக் கடைப்பிடித்தால்*
*நம்வாழ்வு நூற்றுக்குநூறாக*
*நலம்விளைக்கும் என்பதனை*
*நாம்நினைக்க வேண்டாமா !*

*நூற்றுக்கு நூறுநீ வாழுஎனச் சொல்லி*
*நாற்றாக நின்றபல நன்மக்கள்*
*பலரிருந்தார்*
*சேற்றுக்குள் நாம்விழுந்து*
*சிதைக்கின்றோம் வாழ்வதனை*
*ஆற்றல்பெற்ற அவருரைத்த*
*அத்தனையும் வீணாச்சே !*

*மாற்றான மனமெல்லாம் மாறிநின்று*
*விட்டாலே*
*நூற்றுக்கு நூறாகப் போற்றிநிற்க*
*வாழ்ந்திடலாம்*
*ஆற்றலுடை அத்தனையும்*
*அக்கறையாய் கடைப்பிடித்தால்*
*நூற்றுக்கு நூறுபெற்று நூறாண்டே*
*வாழ்ந்திடலாம் !            நூறாண்டு*
*வாழ்கவென வாழ்த்துகின்றோம்*
*நோயின்றி வாழ்கவென*
*வாழ்த்துகின்றோம்*
*பாராள வேண்டுமென*
*வாழ்த்துகின்றோம்*
*பக்குவத்தை தொலைத்துவிட்டுப்*
*பதறுகிறோம்*
*நேரான வழியிருந்தும் பார்த்திடாமல்*
*நித்தமுமே தீயதையே செய்கின்றோம்*
*ஆராய்ந்து அத்தனையும்*
*பார்ப்போமாகில்*
*அனைவருமே நூற்றுக்குநூறை*
*அடைவோமன்றோ !*

*நூற்றுக்கு நூறு வாழ்ந்திடு*
*நோய்நொடி இன்றி வாழ்ந்திடு*
*போற்றுதல் பெற்றிட வாழ்ந்திடு*
*புகழுனைச் சேர்ந்திட வாழ்ந்திடு*
*ஆற்றிடும் யாவுமே நல்லதாய்*
*அமைந்திட வாழ்ந்துமே நின்றிடின்*
*நூற்றுக்கு நூறினைக் காணலாம்*
*நோவெலாம் எமைவிட்டே ஓடிடும் !*